# இலக்கு

வாராந்த மின்னிதழ்

22.12.2019

இதழ் 57

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com

www.ilakku.org www.facebook.com/Illakku-Web https://twitter.com/Ilakku1




## குடியுரிமை சட்டத் திருத்தத்தினால் கொதி நிலையில் இந்தியா

கல்யாணி

## தூதரக அதிகாரிக்கு நடந்தது என்ன? ஆபத்தான நாடாக மாறும் இலங்கை



கொழும்பிலிருந்து அகிலன்



“பாலயோகினி”

## இராணுவத்திடம் கையளித்த எனது மகனை காணவில்லை என அரசு கூறுவதை ஏற்கமுடியாது

சிறப்புச் செவ்வி

## சரியான தரப்புக்களை தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளாக தேர்வு செய்ய வேண்டும்

சட்டத்தரணியும் அரசியல் செயற்பாட்டாளருமான சுகாஷ்





## ஒரு அரசியல் தீர்விற்காக தமிழகம் பேசவேண்டும்

பேராசிரியர் ராமு மணிவண்ணன்

## காலநிலை மாற்றம் மனிதனின் செயற்பாட்டுக்கு எதிரான இயற்கையின் போர்



# சுவிஸ் பணியாளரின் பாதுகாப்பு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கவலை




சிறீலங்கா அரசினால் கைது செய்யப்பட்டுள்ள சுவிற்சலாந்து தூதரகத்தின் பணியாளர் பனிஸ்ரர் பிரான்சிஸ் இன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சிறீலங்காவில் உள்ள சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் பெண் வெள்ளை காரில் கடத்தப்பட்டு சிறீலங்கா புலனாய்வுத்துறைத் தலைவர் நிசந்தா சில்வாவிற்கு எவ்வாறு சுவிஸ் அரசு நுளைவு அனுமதி வழங்கியது என்பது தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் சிறீலங்கா அரசு கடத்தப்பட்டவரை கைது செய்து குற்றவாளியாக்கி சிறையில் அடைத்துள்ளது மேற்குலக நாடுகளை சினம் கொள்ள வைத்துள்ளது. இந்த சம்பவத்தை கையாள்வதற்கு சுவிஸ் அரசு தனது மூத்த அதிகாரியை சிறீலங்காவுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ள அதே சமயம், சுவிஸ் வெளிவிவகார அமைச்சு கடுமையான அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

இதனிடையே, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனாவைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள், சுவிஸ் அரசின் நிலைப்பாட்டையே தாம் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும், கைது செய்யப்பட்ட பணியாளரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

அதேசமயம், சிறீலங்காவின் உள்ளூர் ஊடகங்கள் ஒரு பக்கச்சார்பாக நடப்பாதாகவும், சிறீலங்கா அரசுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சிறீலங்காவில் ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாதிக்கப்பட்ட பெண்களை துஸ்பிரயோகம் செய்த ஐ.நா படையினர்– சிறீலங்கா இராணுவத்திற்கும் தொடர்பு



கெயிட்டி பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கச் சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையினர் அங்கு பாதிக்கப்பட்ட பெண்களையும், சிறுமிகளையும் பாலியல் துஸ் பிரயோகம் செய்து பல நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு அப்பாவாகியுள்ளதாக பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட பெர்மிங்கம் பல்கலைக் கழகம் மற்றும் குயின்ஸ் பல்கலைக் கழகங்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் சிறீலங்கா படையினரும் ஈடுபட்டிருந்ததாகவும், அவர்கள் 9 சிறுமிகளை பாலியல் பலாத்தகாரத்திற்கு உட்படுத்தியதாகவும், சபீன் லீ மற்றும் சூசன் பாற்ரேல்ஸ் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2500 கெயிட்டி மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 10 விகிதத்திற்கு மேற்பட்டவர்கள் ஐ.நா படையினர் அங்கு மேற்கொண்ட பாலியல் துஸ்பிரயோகத்தின் மூலம் பாதிக்கப்பட்டு குழந்தைகளைப் பெற்றுள்ளதாக கூறியுள்ளனர்.

11 வயது சிறுமியையும் பாலியல் துஸ்பிரயோகம் செய்த படையினர் அவர் குழந்தை பெற்றதும், அவரை கைவிட்டுச் சென்றுள்ளனர். குழந்தைகளுடன் கைவிடப்பட்ட சிறுமிகளும் பெண்களும் வறுமையில் தவிக்கின்றனர்.

சில பெண்கள் ஒரு சில நாணயங்களுக்காகவும், சிலர் ஒரு வேளைச் சாப்பாட்டிறகாகவும் பாலியல் துஸ்பிரயோகத் திற்கு உள்ளாகியுள்ளனர். அங்கு காணப்படும் வறுமையை ஐ.நா படையினர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

2004ஆம் ஆண்டில் இருந்து 2007ஆம் ஆண்டு வரையிலும் கெயிட்டியில் பணியாற்றிய 134 சிறீலங்கா படையினர் அங்குள்ள 9 சிறுமிகளை பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளனர்.

அங்கு கைவிடப்பட்டுள்ள குழந்தைகளை "நீல தலைக்கவசக் குழந்தைகள்" என மக்கள் அழைக்கின்றனர். இந்த அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரும், ஐக்கிய நாடுகள் சபை இது தொடர்பில் எந்த பதிலும் வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

# நீதிபதிகளின் தகவல்களை இரகசியமாக திரட்டுமாறு சிறீலங்கா புலனாய்வுத்துறைக்கு ஆணை



சிறீலங்காவில் பதவிக்கு வந்துள்ள புதிய அரசு தனது எதிரிகளை பழிவாங்குவதையும், தனது கட்சி மற்றும் உறவினர்களுக்கு எதிரான வழக்குகளை இல்லாது செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.


இந்த நிலையில் பல காவல்துறை மற்றும் அரச அதிகாரிகள் நாட்டை விட்டு தப்பியோட முற்பட்டுள்ள வேளை சிலர் தப்பியும் ஓடியுள்ளனர். சில அரசியல்வாதிகள் சிறைக்குச் சென்றுள்ளனர்.

இதனிடையே சிறீலங்காவில் உள்ள நீதிபதிகளின் தனிப்பட்ட விடயங்கள் உட்பட எல்லா தகவல் களையும் இரகசியமாகச் சேகரிக்குமாறு சிறீலங்காவின் புலானாய்வுத் துறைக்கு அரசு இரகசிய உத்தரவை வழங்கியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரின் வங்கிக் கணக்குகள், சொத்து விபரங்கள், குடும்ப விபரங்கள், கல்வித் தகமைகள், படித்த கல்லூரி விபரங்கள், அவர்கள் வசம் உள்ள வியாபார நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள், அரசியல் தொடர்புகள், பொது விவாகாரங்களில் அவர்களுக்குள்ள தொடர்புகள், அவர்களின் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை விபரங்கள், தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான தகவல்கள் மற்றும் உறவினர்கள் தொடர்பான தகவல்கள் அனைத்தும் திரட்டப்பட வேண்டும் என சிறீலங்கா அரசு தனது உள்நாட்டு புலனாய்வு அமைப்புக்கு கட்டளையிட்டுள்ளது.

இந்த தகவல்களை அடிப்படையாக வைத்து நீதிபதிகளை மிரட்டி சிறீலங்காவின் புதிய அரசை எதிர்ப்பவர்களுக்கு எதிராக வழக்குகளை மேற்கொள்ளவும், சிறீலங்காவின் புதிய அரச தலைவர் மற்றும் அவரது உறவினர்களுக்கு எதிராக இடம்பெற்று வரும் வழக்குகளை இல்லாது செய்யவும் சிறீலங்கா அரசு முறப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகளை சிறீலங்கா புலனாய்வுத்துறையின் புதிய தலைவராக நியமனம் பெற்றுள்ள பிரிகேடியர் சுரேஸ் சலேஸ் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# இருப்பதைக் காப்பதற்கும் – இழந்தவற்றைப் பெறுவதற்கும் இறையருளுண்டென நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் செயற்படவைக்கும் "கிறிஸ்துவின் பிறப்பு"

பற்றிமாகரன்

*முதலாளித்துவத்தால் சந்தை ஊக்குவிப்புக் காலமாக மாறிவிட்ட அவலநிலை*

- *மண்ணினதும் மக்களதும் விடுதலையை ஊக்குவிக்க வந்த விழா உண்டாட்டுக் கொண்டாட்டங்களுக்கான சந்தை விழாவாகலாமா?*
- *விடுதலையைச் சிந்திக்க நேசிக்கப் பழக்க வந்த விழா- மக்களின் பொருள்வளத்தையும் மதியாற்றலையும் பறிக்கும் விழாவாகலாமா?*

**முன்னுரை**

கிறிஸ்மஸ் என்பதன் பொருள் கிறிஸ்துவுக்கான பூசை என்பது. அதாவது கிறிஸ்து பிறந்து 366 ஆண்டுகளின் பின் டிசம்பர் 25 ஐ கிறிஸ்து பிறந்த நாள் என உரோம மன்னன் கொன்சன்டைன் அறிவித்து ஆட்சியாளர்க்கு அனுசரணை செய்யும் மதமாக மதமெதையும் நிறுவாத கிறஸ்துவின் சிந்தனைகளை மாற்றிய பொழுது தோற்றம் பெற்றதே கிறிஸ்மஸ் விழா. வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தின்படி மார்ச் 25 இலேயே கிறிஸ்து பிறந்தார் என்பதாக உள்ளது. அத்துடன் கீழைத்தேய ஞானிகள் அவரை இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவரை வந்து வணங்கும் வரை கிறிஸ்து பிறந்தார் என்பதே உலகுக்குத் தெரியாது. ஏழைகளில் ஏழையரான இடையர்களுக்கே தெரிந்த ஒரு பிறப்பாக இருந்தது. அவர் பிறந்தமையை தெரிய வந்தவுடனேயே இனஅழிப்பை எதிர்நோக்கி பிறந்த மண்ணான பெத்லேகமில் இருந்து தப்பிச் சென்று அகதியாக நசரேத்தில் புலம்பெயர் வாழ்வைப் பெற்று "நசரேத்தூர் இயேசு" என அழைக்கப்பட்டார் என்பது வரலாறு. ஆனால் மேற்குலக காலனித்துவ மதமாக கிறிஸ்தவம் உலகெங்கும் பரப்பப்பட்ட பொழுதும் பின்னர் அமெரிக்க கலாச்சாரம் உருவாக்கிய சந்தோக்குளோஸ் என்னும் கிறிஸ்மஸ் தாத்தா வர்த்தக மரபு யேர்மனில் ஏழையருக்குப் பரிசுப் பொருள் அளிக்கவென நிறுவப்பட்ட கிறிஸ்மஸ் மரத்தைக்கூட சந்தைக் கவர்ச்சிக்கும் சந்தை ஊக்குவிப்புக்குமான அடையாளமாக்கி கிறிஸ்மஸ் சீசன் என ஒன்றையே உருவாக்கி அன்று முதல் இன்று வரை உண்டாட்டுக் கொண்டாட்ட காலமாக இக்காலத்தை மாற்றி விட்ட நிலையில் கிறிஸ்மஸ் என்பதன் பொருளே மறக்கப்பட்டுள்ளமையை அனைவரும் அறிவர். மண்ணினதும் மக்களதும் விடுதலையை ஊக்குவிக்க வந்த விழா உண்டாட்டுக் கொண்டாட்டங்களுக்கான சந்தை விழாவாகலாமா? விடுதலையைச் சிந்திக்க நேசிக்கப் பழக்க வந்த விழா - மக்களின் பொருள் வளத்தையும் மதியாற்றலையும் பறிக்கும் விழாவாகலாமா? என்கிற கேள்வியே கிறிஸ்மஸ் குறித்த சிறிய தேடல் ஒன்றை இக்கட்டுரையாக முன்வைக்கச் செய்கிறது.

'இன்று இருப்பதைக் காத்தல்- இழந்ததை மீட்டல்' என்பது முடியாட்சிக்கு நிகரான சனநாயக ஆட்சி ஒன்றின் பௌத்த சிங்கள மேலாண்மைக்குள் சிக்குண்ட ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தேவையாக உள்ளது என்பது உலகறிந்த உண்மை. இதைப் போலவே 'இருப்பதைக் காத்தல் - இழந்ததை மீட்டல்', என்பது உரோமர்களின் முடியாட்சிக்கு உட்பட்டிருந்த யூதர்களின் வரலாற்றுத் தேவையாக இருந்த சூழலிலேயே இயேசு மீட்பு தரும் இறைமகனாகப் பெத்லேகமில் பிறந்தார் என்பது, அவரது வாழ்வையும் போதனைகளையும் எருசலேம் கோவிலின் அழிவுக்குப் பின், அதாவது அவர் வாழ்ந்து முக்கால் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுதிய அருளாளர்கள்; மத்தேயுவும், லூக்காவும் தரும் செய்தி. 'இயேசு' என்று பிறக்கும் குழந்தைக்குப் பெயரிடுமாறு -வானதூதர்களால் முன்மொழியப்பட்ட பெயராக –மத்தேயு லூக்கா இருவருமே குறிக்கப்பட்டதாலேயே "இயேசு" அவரின் பெயராக பெருவழக்காகியது. இந்தப் பெயர் 'இயேசு'பிறப்பதற்கு முன்பு பல நூற்றாண்டுக்கு முன்னரே இஸ்ரேயல் மக்களை எகிப்து நாட்டின் அடிமைத் தனத்தில் இருந்து மீட்க முயற்சிகள் எடுத்த மோசேயால் பழைய ஏற்பாட்டில் அறிமுகம் செய்யப்பட்ட பெயராக உள்ளது. பெயரிலேயே இயேசுவின் வாழ்வும் வரலாறும் இஸ்ரேலிய மக்களின் விடுதலைக்கான ஒன்று என்பது எடுத்த எடுப்பிலேயே நற்செய்தியாளர்களால் வெளிப்படுத்தப்பட்டது.

**'இயேசு' கடவுளே விடுதலை தருபவரென்னும் இஸ்ரேலிய புலம்பெயர்வுக்கால நம்பிக்கை மொழி**

காப்பவர் என்ற பொருள்படும் கிபூரு மொழிச் சொல்லான ஓசேயா Hosea,கன்னியின் மகன் ஒருவரை யூதகுலத் தலைவராக மோசே நியமித்த பொழுது மோசேயால் அவருக்குக் கொடுக்கப்பட்டது. ( எப்ராயிம் குலத்தின் இருந்து நூனின் மகன் ஓசேயா. எண்ணிக்கை 13:8 ), பின்னர் மோசோயால் ஓசேயா கானான் நாட்டை உளவு பார்க்க அனுப்பப்பட்ட போது யோசுவா *Jehoshua* (எண்ணிக்கை 13:16) என அப்பெயர் மாற்றப்பட்டது. இதற்கு யாவே (என்றும் இருப்பவர்) தான் மீட்பு எனப் பொருள். இதற்குப் பின்னர் யாவே பபிலோனியாவுக்கு யூதர்கள் புலம்பெயர்ந்த வாழ்வினை மேற்கொண்ட காலகட்டத்தில் கிரேக்க மொழிச் சொல்லான *Jesus* என்னும் சொல்லாக *'Jehoshua'* உள்வாங்கப்பட்டது. இதன் பொருளாக கடவுளே இரட்சணியம் என்னும் கருத்து அமைந்து போராடும் இஸ்ராயேல் மக்களுக்கு நம்பிக்கை தரும் மொழியாக விளங்கியது. இயேசு என்னும் இந்த வரலாற்றுப் பெயரை மரியாளுக்கும் யோசேப்புக்கும் வானதூதர் வெளிப்படுத்தியதன் மூலம் இயேசுவின் பிறப்பு என்பது "இருப்பதைக் காப்பதற்கும் - இழந்தவற்றை மீட்பதற்குமான" இஸ்ரேலிய மக்களின் விடுதலைக்கான தலைவனின் தோற்றம் என்பதை நற்செய்திகள் உறுதி செய்கின்றன. அதிலும் குறிப்பாக நற்செய்தியாளர் லூக்கா இயேசு பிறப்பதற்கு முன்பு கி.மு 8ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த எசயா என்னும் இஸ்ரேலிய இறைவாக்கினர் மண்ணினதும் மக்களினதும் விடுதலை குறித்துப் பேசிய வார்த்தைகளையே அன்னை மரியாளின் " வலியோரை அரியணையில் நின்று தூக்கி எறிந்துள்ளார் - தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பி விடுகிறார்" போன்ற பாடல்களாகவும் இயேசு பேசிய மொழிகளாகவும் மீளப் பதிந்து கிறிஸ்துவின் வரலாறு என்பது விடுதலைக்கான வரலாறு என்பதை மிக அழகாக நிறுவியுள்ளார்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

## புத்தர் சிலைகளின் பின்னாலுள்ள சதி

யாழ்ப்பாணம் பண்ணை பகுதியிலுள்ள புதிய சிறைச்சாலை முன்பாக பௌத்த சின்னங்களை அமைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கமும் சிறைச்சாலை நிர்வாகமும், படையினருடன் இணைந்து மேற்கொண்ட முயற்சி மக்களுடைய கடுமையான எதிர்ப்பினால் கைவிடப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களுடைய தாயகப் பகுதிகளை கபளீகரம் செய்வதற்கும், சிங்கள மயமாக்குவதற்கும் அரச தரப்பினர் பயன்படுத்தும் உபாயங்களில் ஒன்றாகவே பௌத்த சின்னங்களை அமைப்பது இருந்து வருகின்றது. அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே சிறைச்சாலை முன்பாக பௌத்த சின்னங்களை அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்மக்கள் சீற்றமடைந்து அதனை தடுத்து நிறுத்தி இருப்பது முக்கியமானதாகும்.

கோத்தபாய ராஜபக்ச அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் இனம்புரியாத அச்சம் என்ற இருப்பதை கடந்த ஒரு மாத காலத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர்கள் என பலரும் நாட்டைவிட்டு தப்பி சென்றிருக்கின்றார்கள். ஊடகத் துறையினர் மீது மறைமுகமான அச்சுறுத்தல் தொடுக்கப்பட்டிருக்கின்றது. குடாநாட்டில் படையினரின் சோதனைகளும் சுற்றிவளைப்புகளும், தீவிரமடைந்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு அடக்குமுறைகள் தீவிரப்படுத்தப்படும் பின்னணியில் தாம் என்னத்தைச் செய்தாலும் மக்கள் அமைதியாக இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு அரசு தரப்புக்கு இருந்திருக்கலாம்.

அந்த துணிச்சலில்தான் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பாக பௌத்த சின்னங்களையும் சிலைகளையும் அமைப்பதற்கான முயற்சிகளை சிறைச்சாலை நிர்வாகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தமது தாயகம் ஆக்கிரமிக்கப்படுவதை பொறுத்துக் கொண்டிருக்க முடியாத பொதுமக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். மக்களின் எதிர்ப்பையடுத்து பௌத்த சின்னங்களை அமைப்பதற்கான முயற்சி கைவிடப்பட்டுள்ளது. அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் தமது தாயகம் ஆக்கிரமிக்கப் படுவதை சகித்துக் கொண்டிருக்க முடியாது என்ற நிலைமையில் மக்கள் கிளர்ந்தெழுந்ததை சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் பார்க்க முடிந்தது.

அரச மரங்கள் இருக்கும் இடங்களில் புத்தர் சிலைகளை அமைப்பதும் பின்னர் அவற்றை பௌத்த வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் எனக் கூறி சிங்களமயமாக்குவதும், தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சம்பவங்கள். இவற்றின் மூலமாக தமிழர்களின் தாயகத்தில் பல பகுதிகள் பறிபோய் இருக்கின்றன. இவ்வாறு பறிபோன பகுதிகளில் பெரும்பாலானவை கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த பகுதிகள்.

புத்தரின் போதனைகளுக்கோ, பௌத்த சின்னங்கள் அமைக்கப்படுவதற்கோ தமிழர்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால், பௌத்த சின்னங்களை அமைத்து அதன் மூலமாக பௌத்த - சிங்கள மயமாக்கலை முன்னெடுப்பது என்பது தமிழர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. தமது தாயகப் பகுதிகளிலேயே தம்மை சிறுபான்மையினராக்குவதற்கான உபாயமாகத்தான் இவற்றை சிங்கள அரசாங்கம் முன்னெடுப்பதுதான் தமிழர்களை அச்சமூட்டுகின்றது. கோத்தாபயவின் ஆட்சியில் தமிழ் மக்கள் அச்சமூட்டப்பட்டிருந்தாலும், இந்த விடயத்தில் அவர்கள் கிளர்ந்தெழுந்து தமது எதிர்ப்பை வெளியிட்டது முக்கியமான செய்தி ஒன்றைச் சொல்லியிருக்கின்றது.

மக்களுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்கும், அவர்களுடைய தேசியப் பற்றுறுதியிலிருந்து அவர்களை மாற்றுவதற்குமான பல்வேறு உபாயங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இப்போதும் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனாலும், அவற்றுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் தமது அடிப்படையான விடயங்கள் குறித்து விழிப்பாகத்தான் இருக்கின்றார்கள். அதனைத்தான் யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை காண முடிந்தது. முல்லைத்தீவு நீராவியடியில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் காண முடிந்தது.

புத்தர் சிலைகள் இவ்வாறு வடக்கில் அமைக்கப்படுவது இதுதான் முதன்முறையல்ல. வடக்கிலுள்ள பெரும்பாலான இராணுவ முகாம்கள் முன்பாக இவ்வாறு புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பௌத்தவர்கள் வாழாத இடங்களிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. பௌத்த மயமாக்கல் நிகழ்ச்சிநிரலின் ஒரு அம்சம்தான் இது. இப்போது மக்களின் எதிர்ப்பால் தமது முயற்சியை அவர்கள் கைவிட்டிருந்தாலும் கூட, புதிய உபாயங்களுடன் அவர்கள் தமது முயற்சியை அவர்கள் தொடர்வார்கள். அதனால், அவற்றை எதிர்கொள்வதற்கான உபாயங்களுடன் நாமும் தயாராக இருப்பது அவசியம். இல்லையெனில், அம்பாறை பறிபோனதுபோல, திருமலை பறிபோனதுபோல, முல்லைத்தீவு பறிபோய்க்கொண்டிருப்பது போல, யாழ்ப்பாணமும்....!

**- ஆசிரியர்**



# அடிப்படை வசதிகளின்றி தவிக்கும் சிவபுரம் கிராம மக்கள்.

## 15 வருடங்களாக குடிசை வீட்டில் வாழும் அவலம்..!

தாயகத்தில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்த நிலையிலும் உறவுகளின் வாழ்க்கைக்கான போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நாட்டில் அபிவிருத்தி எனும் போர்வையில் அரசியல் இலாபங்களுக்காக திட்டமிடப்படாமல் செய்யும் வேலைத் திட்டங்களினால் தமிழ் மக்கள் மேலும் பொருளாதார ரீதியில் நசுக்கப்படுகின்றனர்.

ஸ்ரீலங்காவில் கடந்த ஆட்சிக் காலத்திலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வோ அல்லது பொருளாதார நலத் திட்டங்களோ சாத்தியப் படவில்லை. தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று வரை ஓலைக் கொட்டகைகளில் அடுத்த வேளை சாப்பாட்டுக்கே வழியில்லாமல் வாழ்க்கைக்காக போராடும் குடும்பங்கள், கிராமங்கள் பல உள்ளன.

இவ்வாரம் போருக்கு பின் பாரிய வளர்ச்சி கண்ட வவுனியா மாவட்டத்தின் நகர் பகுதியிலிருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் வாழும் குடும்பங்களின் அவலநிலையைப் பார்ப்போம்.



வவுனியா மாவட்டம் செக்கட்டிப்புலவு சிவபுரம் என்ற கிராமத்தில் வாழும் மக்களின் நிலையை இலக்கு செய்திப்பிரிவு நேரில் சென்று ஆராய்ந்தது.

சிவபுரம் கிராம மக்கள் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டில் இடம்பெற்ற போரினால் இடம்பெயர்ந்து வவுனியாவில் பல முகாம்களில் தங்கியிருந்து அடிப்படை வசதிகள் இல்லாமல் பல துன்பங்களை அனுபவித்து வந்தனர். அதன்பின் 1999 ஆண்டு பல கனவுகளுடன் சொந்த ஊரில் மீள்குடியேற்றப்பட்டனர். அன்று களிமண்ணால் கட்டப்பட்ட வீட்டில் தான் இன்று வரை வாழ்ந்து வருகின்றனர்.



அடர்ந்த காடுகள் சூழ்ந்த குறித்த கிராமத்தில் பூச்சிகள், பாம்புகள், காட்டு யானைகளின் தொல்லை என பல சவால்களுக்கு மத்தியில் கைக்குழந்தைகளுடன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பூர்வீக குடிகளாக இருந்த சிவபுரம் கிராம மக்களுக்கு ஸ்ரீலங்கா அரசினால் வீட்டுத் திட்டங்கள் கூட வழங்க முடியவில்லை.

தேர்தல் காலங்களில் வாக்கு கேட்டு கிராமத்துக்குள் வரும் அரசியல் வாதிகள் தமது வாக்கு வங்கியை நிரப்புவதற்காக வீட்டுத் திட்டம் வழங்கப்படும், வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும், அரச சலுகைகள் பலவற்றை பெற்றுத் தருவோம், வீதி செப்பனிட்டுத் தருவோம், என பல வாக்குறுதிகளை வழங்குகின்றனர். தேர்தல் காலம் முடிவடைந்து பதவிகள் கிடைத்த பின் வாக்களித்த மக்களை மறந்து விடுவார்கள். இதன் காரணத்தினால் சிவபுரம் மக்கள் தமது வாக்குரிமைகளைக்கூட பயன்படுத்தாமல் வாழ்ந்து வருகின்றனர்.

**தாயகத்தில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்த நிலையிலும் உறவுகளின் வாழ்க்கைக்கான போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நாட்டில் அபிவிருத்தி எனும் போர்வையில் அரசியல் இலாபங்களுக்காக திட்டமிடப்படாமல் செய்யும் வேலைத் திட்டங்களினால் தமிழ் மக்கள் மேலும் பொருளாதார ரீதியில் நசுக்கப்படுகின்றனர்.**

**ஸ்ரீலங்காவில் கடந்த ஆட்சிக் காலத்திலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வோ அல்லது பொருளாதார நலத்திட்டங்களோ சாத்தியப்படவில்லை. தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று வரை ஓலைக் கொட்டகைகளில் அடுத்த வேளை சாப்பாட்டுக்கே வழியில்லாமல் வாழ்க்கைக்காக போராடும் குடும்பங்கள், கிராமங்கள் பல உள்ளன.**

**இவ்வாரம் போருக்கு பின் பாரிய வளர்ச்சி கண்ட வவுனியா மாவட்டத்தின் நகர் பகுதியிலிருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் வாழும் குடும்பங்களின் அவலநிலையைப் பார்ப்போம்.**

இதேவேளை சிவபுரம் கிராமத்தின் அயல் கிராமமான சாளம்பைக்குளம் முஸ்லீம் மக்கள் வாழும் கிராமம். குறித்த கிராமத்திற்கு, புத்தளத்தில் நிரந்தரமாக வாழும் மக்களை கடந்த ஆட்சிக்காலத்தில் குடியேற்றியிருந்தனர். இவர்களுக்கு முஸ்லீம் அமைச்சர் ஒருவரின் செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களுக்கான வீட்டுத்

**கோ–ரூபகாந்**



திட்டம் மின்சார இணைப்பு, பள்ளிவாசல், பாடசாலை அனைத்தும் அரசநிதியில் கட்டிக் கொடுத்து சுகபோகமான வாழ்க்கைக்கு வழியமைத்து கொடுத்துள்ளார்.

இருப்பினும் சில மாதங்கள் வாழ்ந்த முஸ்லீம் குடும்பங்கள் காணி வீடுகளை வாடகைக்கு கொடுத்து விட்டு மீண்டும் புத்தளத்திற்கே சென்று விட்டனர். இந்திய அரசின் நிதிப் பங்களிப்பில் கட்டப்பட்ட பல வீடுகளில் இன்று யாருமில்லாமல் ஆடுமாடுகள் அடையும் இடமாக மாறியிருக்கின்றது. ஆனால் அயல் கிராமத்தில் பூர்வீகமாக வாழும் தமிழ்மக்கள் இன்னமும் ஓலைக் கொட்டகைகளிலும், தகரக் கூடாரங்களிலுமே வாழ்ந்து வருகின்றனர். தமிழ் அரசியல் வாதிகள் இந்த துன்பியல் சம்பவங்களைக் கண்டும் காணாத மாதிரியும் தமது அரசியலை செய்து வருகின்றமையால் மக்கள் மேலும் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.



வீட்டுத் திட்டம், மின்சாரம், மலசலகூடம், குடிநீரென அடிப்படை வசதிகளில்லாமல் அன்றாடம் கூலிவேலை செய்து தற்போதைய நாட்டின் பொருளாதார நிலைக்கு ஈடுகொடுத்து அரைவயிற்று உணவுக்கே போராடும் சிவபுரம் கிராம மக்களின் வாழ்வில் நிலையான மாற்றத்தைக் கொண்டுவர அரசும், அரசியல்வாதிகளும், மக்கள் பிரதிநிதிகளும் முன்வரவேண்டும்.



இதேவேளை, புலம்பெயர் உறவுகளின் உதவிக் கரத்தினாலேயே போருக்குப்பின் தமிழர் தாயக பிரதேசங்கள் ஓரளவு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. உங்களின் உதவிகளினாலாவது சிவபுரம் கிராம மக்களின் வாழ்வில் ஒளி பிறக்குமென்று நம்புகிறோம்.

இலக்கு வாராந்த மின்னிதழில் தாயக உறவுகளின் அவலங்களை வெளியுலகுக்கு எழுத்து மூலமும் புகைப்பட வடிவிலும் வெளிப்படுத்தி உறவுகளின் விடியலுக்காக இலக்கும் உங்களுடன் பயணிக்கும். இதேவேளை மின்னிதழில் வெளியாகும் இந்தக் கட்டுரையின் சாராம்சம் அடங்கிய காணொளியை www.ilakku.org எனும் எமது உத்தியோகபூர்வ செய்தி இணையதளத்தில் பார்வையிடலாம்.

# 'இராணுவத்திடம் கையளித்த எனது மகனை காணவில்லை என அரசு கூறுவதை ஏற்கமுடியாது

பாலயோகினி

போர் நிறைவடைந்த பின்னர் 2009இல் கைதாகிய எனது மகனை, 2009 ஜுலை இருப்பதாகக் கூறினார்கள். பின்னர் 2014 ஒக்டோபர் 24ஆம் திகதி இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் இப்போது இல்லை எனக் கூறுகின்றார்கள் என வவுனியாவில் நடைபெற்ற காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தில் கலந்து கொண்ட பெரிய புதுறோட், சாஸ்திரி கூழாங்குளத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பாலயோகினி தெரிவித்துள்ளார்.

இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் கருத்துத் தெரிவிக்கையில், அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:



இன்று(16) நாங்கள் 1032ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றோம். எனது மகனான 17 வயதுடைய (26.05.1991) சங்கப்பிள்ளை ரதன் என்பவர் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி ஓமந்தையில் எங்களுடன் நின்ற போது விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டார். அந்த இடத்தில் பெண்கள் வேறாகவும், ஆண்கள் வேறாகவும் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். எனது மகனை விசாரணை முடிந்து விட்டதும் அவர் என்னிடம் வரும் போது, ஒரு இராணுவத்தினன் வந்து அவரை இன்னும் ஒரு முறை விசாரிக்க வேண்டியுள்ளது என்று கூறி அழைத்த போது, நான் அவரை விட முடியாது என மறுத்தேன். இருந்தும் ஒரு முறை விசாரித்த பின் விட்டு விடுவதாகக் கூறி அழைத்துச் சென்றார். பிற்பகல் 4 மணிவரை காத்திருந்தேன். அவரை விடவில்லை. என்னை பலவந்தமாக பஸ்ஸில் ஏற்றி அனுப்பி விட்டனர். அன்றிலிருந்து இன்று வரை பதினொரு வருடங்களாக அழுது கொண்டேயிருக்கின்றேன்.




2009 ஜுலை 12ஆம் திகதி எனது மகனுடன் 40பேர் செட்டிகுளம் பாடசாலையில் இருப்பதாகவும் அவர்களை உறவினர்களிடம் கொண்டு வந்து விட இருப்பதாகவும், நாங்கள் அகதி முகாமில் இருக்கும் போது கூறினார்கள். பின்னர் எந்தவித பதிலும் இல்லை. அதன் பின்னர் 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி எனது மகனின் கடிதத்துடன் வந்தார்கள். அவர் தான் படித்த பாடசாலை போன்ற எல்லா விபரங்களையும் எழுதிக் கொடுத்திருந்தார். என்னுடைய மகனின் விபரங்களை கேட்டனர். நான் அவரை ஒருதடவை பார்க்க வேண்டும் என்று கூறினேன். ஐந்து வருடங்கள் பொறுத்திருந்து விட்டீர்கள். இன்னும் ஒரு மாதத்தில் உங்கள் மகனை விட்டு விடுவோம் எனக் கூறினார்கள். கிராம சேவை அலுவலகரின் கடிதத்துடன் வாருங்கள் விடுவோம் என்று கூறினார்கள்.

ஐந்து வருடங்களின் பின்னர் அந்த ஒருநிமிடம் நான் எனது மகன் வந்து விடுவார் என்று சந்தோசமடைந்தேன். ஆனால் இன்று வரை வரவில்லை. இன்று நாங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளையின் படத்தை இன்று பத்து வருடங்களாக கையில் கொண்டு திரிகின்றோம். எனது மகன் உயிரோடு இருந்தால், இப்போது அவருக்கு 28 வயது. எவ்வளவோ துன்பங்களுக்கு மத்தியில் வெள்ளத்திலும், எறிகணை வீச்சுக்களிலும் காப்பாற்றிக் கொண்டு வந்தோம். ஓமந்தைக்கு போன பின்னர் எமக்கு ஒரு விடிவு கிடைக்கும் என நினைத்தோம். இவ்வளவு பாடுபட்டு கொண்டு வந்து இன்று இராணுவத்தினரிடம் கொடுத்துவிட்டு நிற்கின்றோம்.

தற்போதைய ஜனாதிபதி, காணாமல் போன எங்கள் பிள்ளைகள் இல்லை என்று கூறுகின்றார். ஆனால் எங்கள் பிள்ளைகள் காணாமல் போகவில்லை. நாங்கள் அவர்களை இராணுவத்தினரின் கைகளில் கொடுத்தோம். என்னைப் போல் எத்தனையோ தாய்மார் தங்கள் பிள்ளைகளை இராணுவத்தினரின் கைகளில் கொடுத்திருக்கின்றார்கள். காணாமல் போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் கொடுக்கப் போவதாகவும், நிவாரணம் கொடுக்கப் போவதாகவும் கூறுகின்றார்கள். எங்களுக்கு நிவாரணம் வேண்டாம். எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு வேண்டும். எங்கள் பிள்ளைகள் இருக்கின்றார்கள். இந்த அரசாங்கம் சரியான பதிலைக் கூறவேண்டும். அனைத்துலக நாடுகள் எல்லாம் கவனித்துக் கொண்டிருக்கின்றன.

சிறீலங்கா ஜனாதிபதி இந்தியா சென்ற போது, தமிழருக்கு சரியான தீர்வை வழங்க வேண்டும் என்று இந்தியா கூறியது. எல்லாவற்றிற்கும் சரியென்று கூறிவிட்டு வந்து இன்று ஜனாதிபதி காணாமல் போனவர்கள் இல்லை என்று கூறுகின்றார். ஜனாதிபதி ஓர் நாட்டின் தந்தைக்கு சமனானவர். அவர் எப்படி எங்கள் பிள்ளைகள் இல்லை என்று கூறுவார். அவர் தமிழ் மக்களை வேறாகவும், முஸ்லிம் மக்களை வேறாகவும், சிங்கள மக்களை வேறாகவும் பார்க்க முடியாது. எல்லோரையும் சரிசமனாகவே பார்க்க வேண்டும். அனைத்து லக நாடுகள் எங்கள் நாட்டில் நடப்பவற்றை அவதானிக்க வேண்டும். இங்கு எப்படி போராட்டம் நடைபெறுகின்றது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். நாங்கள் வறுமையில் வாழ்கிறோம். ஆனால் எமக்கு காசு பணம் வேண்டாம். நாங்கள் துன்பங்களுக்கு மத்தியில்தான் எங்கள் பிள்ளைகளை வளர்த்தோம். எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு வேண்டும். அடைத்து வைத்திருக்கும் எங்கள் பிள்ளைகளை எங்களிடம் விடவும். இல்லையென்று கூறவேண்டாம். 2009 இல் கைதாகிய பிள்ளை, 2009 ஜுலை இருப்பதாகக் கூறினார்கள். பின்னர் 2014 ஒக்டோபர் 24ஆம் திகதி இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் இப்போது இல்லை எனக் கூறுகின்றார்கள்.

புதிய அரசாங்கம் வந்ததும் எங்கள் பிள்ளைகளுக்கு பதில் கிடைக்கும் என்றும் எங்கள் பிள்ளைகளை பார்ப்போம் என்றும் எவ்வளவு ஆவலாக இருந்தோம்.

எங்களுக்கு ஒரு விடிவு கிடைக்கும் என நாங்கள் எண்ணியிருந்தோம். எங்கள் பிள்ளைகளை எங்களுக்கு மீட்டுத் தாருங்கள்.

**கேள்வி- புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்- புலம் பெயர்ந்த தமிழர்களும் எங்கள் செய்திகளைப் பார்க்க வேண்டும். நாங்கள் எவ்வாறு எங்கள் உயிர்களைக் கேட்டுப் போராடுகின்றோம் என பார்க்க வேண்டும். நீங்களும் எங்களுக்கான போராட்டத்தை செய்யுங்கள். எங்களுக்கு ஒரு நீதியைப் பெற்றுத் தாருங்கள் என்று தான் நாங்கள் கேட்கின்றோம். நாங்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கொடிகளைப் பிடிப்பது, அவர்கள் வர வேண்டும். எங்களுக்கு சரியான பதிலைத் தரவேண்டும் என்றே நாங்கள் அவர்களின் கொடியைப் பிடிக்கின்றோம்.

# ஆபத்தான நாடாக மாறும் இலங்கை

கொழும்பிலிருந்து அகிலன்



## தூதரக அதிகாரிக்கு நடந்தது என்ன?

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரக உள்ளூர் பெண் அதிகாரி கார்னியர் பிரான்சிஸ் கடத்தப்பட்டதாக சொல்லப்படும் சம்பவம் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர போரை ஆரம்பித்து வைத்திருக்கின்றது. பெண் அதிகாரி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருக்கின்றார். தொடர்ச்சியாக மணிக் கணக்கில் அவர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டி ருப்பதும் இராஜதந்திர வட்டாரங்களில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. விசாரணை முடிந்து தீர்ப்பு அறிவிக்கப்படுவதற்கு முன்ன தாகவே அரசாங்க தரப்பிலிருந்து வெளிவரும் அறிக்கைகள் பாதிக்கப்பட்டவரை குற்றம் சாட்டு வதாகவே இருக்கின்றது. இது தொடர்பில் சுவிட்சர்லாந்து வெளிவிவகார அமைச்சும் காட்ட மான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கடந்த வாரம் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து இந்த விவகாரம் தொடர் பாக ஆராய்ந்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடை யிலான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இந்த விவகாரம் கையாளப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார். அதேவேளையில், இலங்கை அரசாங்கம் மேற் கொண்டு வரும் விசாரணைகளுக்கு தமது பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என்பதையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார். தூதரக பெண் அதிகாரி வெள்ளை நிற காரில் கடத்தப்பட்டதாக தெரிவிக் கப்படும் குற்றச்சாட்டு தவறானது எனவும் அரசாங்கத்தின் மீது சேறு பூசுவதாக அமைந்திரு க்கிறது என ஜனாதிபதி இதன்போது தெரிவித்த தாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

சுவிட்சர்லாந்து தூதுவருக்கும் ஜனாதிபதி க்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்ற அன்றைய தினமே விசாரணைக்காக அழைத்து



செல்லப்பட்ட பெண் அதிகாரி கைது செய்யப் பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். உளவியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த அவரை 5 நாட்கள் வரையில் தொடர்ச்சியாக மணித்தியாலக் கணக்கில் விசாரணைக்கு உள்ளாக்கியதும், அங்கொடை மனநல மருத்துவமனைக்கு அழைத் துச் செல்லப்பட்டு அவருடைய மனநலம் எவ்வாறு உள்ளது என்பதையிட்டு சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதும் சுவிட்சர்லாந்துக்கு கடும் விசனத்தை ஏற்படுத்தி இருப்பதாக தெரிகின்றது.

தூதரக பெண் அதிகாரி கைது செய்யப்பட்ட பின்னர் சுவிட்சர்லாந்து அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இதனை உணர முடிகின்றது. விசாரணைகள் சர்வதேச தரத்தில் இருக்க வேண்டும் என்ப தையும் பாதிக்கப்பட்டவர் தொடர் பான உண்மை நிலைமைகள் வெளிப் படுத்தப்பட வேண்டும் என்பதையும் சுவிட்சர்லாந்து மீண்டும் வலியுறுத்தி இருந்தது. அத்துடன் விசாரணைகள் முடிவடைவதற்கு முன்னதாகவே கருத்துக்கள் வெளிப்படுத்தப் படுவதையிட்டும் சுவிஸ் அரசு அதிருப்தியடைந் திருக்கின்றது. இந்தப் பின்னணியில் இரு நாடு களுமே இந்தப் பிரச்சனையை சுமுகமாக தீர்க்க வேண்டும் எனவும் முரண்பாடுகளுக்கு இடமளிக் க கூடாது எனவும் உத்தியோகபூர்வமாக சொல்லிக் கொண்டாலும் கூட, இராஜதந்திர ரீதியில் ஒரு நெருக்கடி நிலைமை உருவாகி இருப்பதை உணர முடிகின்றது.

### காரில் கடத்தப்பட்டாரா?

தூதரக அதிகாரியின் விவகாரம் இந்த அளவுக்கு குழப்பமானதாகவும் நெருக்கடிக்கு ள்ளானதாகவும் மாற்றமடைந்தமைக்குப் பல காரணங்கள் உள்ளன. தூதரக அதிகாரி கடத்தப்பட வில்லை என்பது தொழில்நுட்ப ரீதியாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்பதை மட்டுமே இலங்கை அரசின் அமைச்சர்களும் பாதுகாப்பு துறையினரும் தொடர்ச்சியாக கூறி வருகின்றார் கள். இதனை திரும்ப திரும்ப கூறுவதன் மூலமாக முக்கியமான உண்மை ஒன்று மறைக்கப்படு கின்றது. அது என்ன என்பதை விட்டு இந்த வாரம் சுருக்கமாக பார்ப்போம்.

வெள்ளை நிற கார் ஒன்றில் தான் கடத்திச் செல்லப்பட்டு அதற்குள் வைத்தே இரண்டு மணி நேரத்திற்கு மேலாக விசாரணை மேற்கொள்ளப் பட்டதாகவும் தன்னுடைய ஸ்மார்ட் போனி லிருந்து தகவல்கள் பலவந்தமாக எடுக்கப்பட்ட தாகவும் இதன் போது பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்ட பெண் அதிகாரி தூதரகத்திடம் முறைப்பாடு செய்திருந் தார். பின்னர் இவ்விடயம் அரசாங்கத்திற்கு தூதரகத்தினால் தெரியப்படுத்தப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சி.ஐ.டி.யினர் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கக்கூடிய சிசிடிவி கேமராக்கள், மற்றும் குறிப்பிட்ட பெண் அதிகாரி பயன் படுத்திய 'ஊபர்' வாடகை கார் பதிவுகள் என்ப வற்றை அடிப்படையாக வைத்து குறிப்பிட்ட நேரத்தில் அவர் கடத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். இதன் மூலம் கடத்தல் எதுவும் இடம்பெறவில்லை என்பதையும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதையும் அரசாங்க தரப்பு சொல்லி வருகின்றது.

கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நேரத்தில், பெண் அதிகாரி கொழும்பு - 7 இல் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்றுவந்திருப்பதை ஊபர் வாடகைக்கார் பதிவுகளும், சிசிரிவி கமரா பதிவுகளும் உறுதிப்படுத்தியிருக்கின்றன. குறிப் பிட்ட வீட்டுக்கு அவர் ஏன் சென்று வந்தார் என்பதில்தான் பெரும் மர்மங்கள் புதைந்திருக் கின்றன. ஆனால், அது குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதைத் தவிர்த்து, பெண்ணைக் குற்றவாளியாகக் காட்டுவதில்தான் அரசின் முழுக் கவனமும் உள்ளது.

### தப்பிய பொலிஸ் அதிகாரி உதவியவர்கள் யார்?

கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட உடனடியாக முக்கிய போலீஸ் அதிகாரி ஒருவர் தன்னுடைய குடும்பத் துடன் ஜெனிவாவுக்கு தப்பி சென்றார். நிசாந்த சில்வா என்ற இந்த அதிகாரி ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர் பாக விசாரணைகளை முன்னெடுத்தவர். அந்தக் கொலைகள் தொடர்பாக பல்வேறு ஆதாரங்களும் அவரிடம் இருந்தன ஆனால் அரசியல் காரணங் களால் அந்த விசாரணைகள் முன்னெடுக்கப் படாது தடுக்கப்பட்டது. பெருமளவு ஆதாரங் களை வைத்திருந்த நிசாந்த சில்வா, கோதபாய பதவியேற்ற பின்னர் தான் பழி வாங்கப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே நாட்டை விட்டு அவசரமாக வெளியேறினார். அவரும் அவரு டைய குடும்பத்தினரும் திடீரென ஜெனிவா செல்வதற்கு தேவையான வீசாவை சுவிட்சர் லாந்து தூதரகம் வழங்கியது எப்படி என்பது கேள்வியாக உள்ளது.

தற்போது கைதாகி தடுத்து வைக்கப்பட்டி ருக்கும் தூதரக அதிகாரியிடம் இது குறித்த தகவல்கள் இருக்கலாம் என்ற ஒரு எதிர்பார்ப்



புடனேயே அவர் இலக்கு வைக்கப்பட்டார். ஆனால் அவர் சொல்வது போல அவர் கடத்திச் செல்லப்படவில்லை. குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டு " பொறி" வைக்கப் பட்டு பிடிக்கப்பட்டார்.

விசா விண்ணப்பம் ஒன்றை நிரப்புவதற்கு தனக்கு உதவி புரியுமாறு கேட்டுக் கொண்ட பெண் ஒருவருடைய அழைப்பை ஏற்று அவருடைய இல்லத்திற்கு சென்ற போது அவருக்கு அங்கு ஆபத்து காத்திருந்தது. தூதரக நடைமுறைகள் விதிமுறைகளின்படி தனிப்பட்ட ஒருவருடைய இல்லத்திற்கு சென்று அவருடைய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்வதற்கு தூதரக அதிகாரிகள் உதவி செய்ய முடியாது. இதனை தெரிந்து கொண்ட சில நபர்களே ஒரு பெண் மூலமாக

தூதரக அதிகாரிக்கு பொறி வைத்து குறிப்பிட்ட இடத்திற்கு அவரை வரவழைத் திருக்கின்றார்கள்.

தொடர்ச்சி 14ம் பக்கம்



# சரியான தரப்புக்களை தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளாக தேர்வு செய்ய வேண்டும்

## சட்டத்தரணியும் அரசியல் செயற்பாட்டாளருமான சுகாசின் சிறப்புச் செவ்வி

**காத்திரமான வாதங்களை முன்வைக்கின்ற முன்னணி சட்டத்தரணியும் அரசியல் செயற்பாட்டாளருமான திரு கனகரட்ணம் சுகாஸ் அவர்களை இலக்கு ஊடகங்களுக்காக செவ்வி கண்டோம்.**

**கேள்வி:-**

***2 வருடங்களாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி வந்த 9 வயதுச் சிறுமி தொடர்பான வழக்கில் ஆஜராகி இருக்கின்றீர்கள். மிகவும் கடுமையான தண்டனைக்குரியதாக கருதப்பட்ட இப்படியான குற்றங்கள் முள்ளிவாய்க்காலின் பின்னர் பெருகி வருவதினை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?***

பதில்:-

முள்ளிவாய்க்காலிற்கு முன்னர் சமூகத்தை யோசிக்கின்ற பெண்களையும், குழந்தைகளையும் மதிக்கின்ற ஒரு தலைமைத்துவம் இருந்தது. அந்த தலைமைத்துவமும் தாம் வகுத்த கொள்கைகளின்படி செயற்பட்டது. அது மாத்திரமல்லாமல் குற்றம் இழைத்தவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் முள்ளிவாய்க்காலிற்குப் பிற்பாடு நிலைமை தலைகீழானது. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு திட்டமிட்டு தமிழ் சமூகத்தின் மத்தியிலே போதைப் பொருட்கள் விதைக்கப்பட்டு, மக்களின் மனங்களிலே மாற்றங்கள் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது. இன உணர்வை சிதைக்கின்ற போதைப் பொருட்களின் வருகை பல குற்றங்களுக்கு வித்திட்டது. அது மாத்திரமல்லாமல் சமூகத்தில் நேசிக்கின்ற போக்கும், இனத்தை யாசிக்கின்ற போக்கும் திட்டமிட்டு கருவழிப்பு செய்யப்பட்டதன் விளைவுதான் இப்படியான குற்றங்களின் பெருக்கத்திற்கான காரணம்.

**கேள்வி:-**

***அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக பேசுகின்ற சிறீகாந்தா போன்ற சட்டத்தரணிகளே இவ்வாறான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பில் ஆஜராகி இருக்கின்றனரே. பணமிருந்தால் எதையும் செய்யலாமென்று எங்கள் சமூகம் இன்னுமின்னும் குற்றஞ் செய்கின்ற எண்ணங்களை இது வளர்த்து விடுமல்லவா?***

பதில்:-

நானும் ஒரு சட்டத்தரணி என்ற வகையில், சிறிகாந்தா அவர்கள் இந்த வழக்கில் ஆஜரானதை தவறாக பார்க்கவில்லை. ஏனெனில் அவர் ஒரு சட்டத்தரணியாக தனது கடமையைச் செய்திருக்கின்றார். மேலும் இந்த வழக்கில் சிறிகாந்தா அவர்கள் ஆஜராகி இருக்கா விட்டால், இன்னொரு சட்டத்தரணி நிச்சயமாக ஆஜராகியிருப்பார். ஆனால் அரசியல் பேசுகின்ற சட்டத்தரணிகள் இப்படியான வழக்குகளை தவிர்ப்பது நல்லதென்று கருதுகின்றேன். மேலும் இந்த விடயத்தில் சமூகத்தின் மத்தியில் ஒரு மனமாற்றம் ஏற்பட வேண்டும். திருடனாய் பார்த்து திருந்தா விட்டால், திருட்டை ஒழிக்க முடியாது என்று சொல்லுவார்கள். இந்த விடயத்தில் சமூகத்தின் மத்தியில் ஒரு மனமாற்றம் ஏற்பட வேண்டும். உண்மையில் எமது பண்பாட்டு விழுமியங்களின் அதிகரித்த போக்கே இப்படியான குற்றச் செயல்களின் பின்னணியில் ஒரு வீழ்ச்சியைக் கொண்டு வருமென நான் கருதுகின்றேன்

**கேள்வி:-**

***முள்ளிவாய்க்காலின் பின்னர் கேட்பாரின்றி எமது சமூகத்துக்கும் இனத்துக்கும் யாரும் எவ்வாறான தவறையும் இழைத்து விடலாமென்ற சூழல் ஏற்பட்டுள்ளது. இதனை தமிழ்ச் சமூகம் எவ்வாறு கையாள வேண்டுமென நீங்கள் கருதுகின்றீர்கள்?***

பதில்:-

தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஒரு சரியான இடத்தை நேசிக்கின்ற தலைமை இல்லாத காரணத்தினால், இன்று இத்தகைய நிலைமை காணப்படுகின்றது. இத்தகைய நிலைமையில் ஒரு மாற்றம் வரவேண்டுமாக இருந்தால், தமிழ்ச் சமூகம் கொள்கையை நேசிக்கின்ற, கொள்கையின் பாதையில் பயணிக்கின்ற சரியான தரப்புகளை தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்ய வேண்டும். அரசியல் அரங்கில் முன்னிலைப்படுத்த வேண்டும். சரியான பிரதிநிதிகளை கொள்கைகளை வலியுறுத்துகின்ற தரப்புகளை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.



இவ்வாறான ஒரு மாற்றம் ஏற்பட்டால் மட்டும் தான் இப்படியான நிகழ்வுகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். அல்லது எமது சமூகம் தொடர்ந்தும் இப்படியான பாதையில் பயணிப்பதை தவிர்ப்பது இயலாத காரியம்.

**கேள்வி:-**

***மணல் அகழ்வில் அண்மையில் கொண்டு வரப்பட்ட மாற்றம் கட்டுப்பாடற்ற மணல் அகழ்வையும் கொத்தளிப்பையும் தமிழர் நிலங்களில் ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பான தங்களது நிலைப்பாடு என்ன?***

பதில்:-

இதை நாங்கள் மணல் மாபியா என்று சொல்வதுதான் மிகவும் பொருத்தமானது. ஏனென்றால், மணலைக் கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் தேவையில்லை என்ற விடயம் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது ஒரு ஆச்சரியத்தோடு தான் மக்களும் நாங்களும் அதை பார்த்தோம். ஏனென்றால், இது சட்டவிரோத செயற் பாட்டிற்கும், சூழல் பாதிப்பிற்கும் நிச்சயம் வித்திடும் என்று நிச்சயம் தெரியும். இதற்கு அதிகார வர்க்கத்திலுள்ள சிலரின் தீர்க்கதரிசன மற்ற பணப் பேராசையின் விளைவு தான் இது என்று சொல்ல வேண்டும். உண்மையில் இது ஒரு மணல் மாபியா. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். உடனடியாக ஏற்கனவே இருந்த நிலைமைக்கு மாற்றப்படாவிட்டால், சூழல் மாசடைவதோடு மட்டுமல்லாமல், எமது யாழ்ப் பாணக் குடாநாடு ஒரு தனித் தீவாக மாறக்கூடிய அபாயமும் காணப்படுகின்றது. ஆகவே சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கும், மணல் மாபியாவை கட்டுப்படுத்துவதற்கும் அனுமதியற்ற வகையிலே மணலை கொண்டு செல்கின்ற அந்த செயற்பாடு தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

**கேள்வி:-**

***கோத்தபாயவின் தேர்வுக்குப் பின்னரான சூழல் எவ்வாறு உள்ளது. பொதுத் தேர்தலுக்கான அறிவிப்புக்கள் வந்துள்ள நிலையில் தமிழர் தரப்பு இதனை எவ்வாறு அணுக வேண்டுமென கருதுகின்றீர்கள்?***

பதில்:-

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இன்னொரு முகம் ஆட்சிக்கு வந்திருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரையில் ஆட்சிக்கு வருகின்ற எந்த தரப்பினருமே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் வடிவங்களாகவே இருக்கின்றனர். பிரேமதாசா, சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஸ, மைத்திரிபால சிறிசேன, தற்போது வந்துள்ள கோத்தபயா ராஜபக்ஸ, ஏன் சஜித் பிரேமதாசாகூட பௌத்த சிங்கள பேரினவாதத் தின் ஒரு வடிவமாகத்தான் வெவ்வேறுபட்ட முகங்களாக மட்டுமே இருக்கின்றனரே தவிர, இவர்கள் தமிழ் மக்களுக்கு தாங்களாக விரும்பி எவற்றையும் தரப்போவது கிடையாது. ஆகவே இவர்களிடம் பேரம் பேசி, இவர்களை சர்வதேச நெருக்கடிக்குள் தள்ளி தமிழ் மக்களுக்கு உரிமைகளையும், விடுதலையையும் பெற்றுக் கொடுக்கக் கூடிய கொள்கையை நேசிக்கின்ற, கொள்கையின்பால் செயற்படுகின்ற சரியான தரப்புக்களை தமிழ் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்து, அவர்களை தங்களின் தலைமைகள் ஆக்குவது மட்டும் தான் தமிழர் தரப்பிற்கு எதிர் காலத்திற்கு ஒளிமயமாக்குகின்ற ஒரு நடவடிக்கையாக இருக்கும். அல்லாவிட்டால், தற்போதிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளிடம் அடகு வைக்கின்ற செயற்பாட்டை தொடர்வதற்குத் தான் வித்திடும்.

**கேள்வி:-**

***உலக வல்லரசுகளின் போட்டிக்களமாகவும் எமது நிலங்கள் மாறியுள்ளன. இந்த நிலையில் தமிழ் மக்களுடைய அரசியல் விடுதலை தொடர்பான போராட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது. முள்ளிவாய்க்காலின் பின்பும் எங்களது அரசியல் விடுதலை சாத்தியமா?***

பதில்:- உண்மையில் முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட போது, தமிழ்த் தேசத்திற்கான ஒரு அங்கீகாரத்தைப் பெறுகின்ற

**தொடர்ச்சி 14ம் பக்கம்**



பகுதி 3

# ஒரு அரசியல் தீர்விற்காக தமிழகம் பேசவேண்டும்

பேராசிரியர் ராமு மணிவண்ணன்

(இறுதிப் பகுதி)

இனப்பிரச்சினை தொடர்பாகவும், புதிய இலங்கை அரசியல் தொடர்பாகவும், இன்றைய அரசியலில் தமிழர்களின் பங்களிப்பு பற்றியும் பேராசிரியர் ராமு மணிவண்ணன் அவர்கள் இலக்கு இணையத்திற்கு வழங்கிய நேர்காணலை இங்கே பகிர்கின்றோம்.

**கேள்வி**

***எந்த ஒரு நாடும் சுதந்திரம் அடைந்த பின்னர் உண்மையான சக்தியை அடையாளம் காணாது, மனதிற்குள் வன்மத்தை வைத்துக் கொண்டு சிங்களத் தலைமைகளோடு இந்திய அரசியல் தலைமைகள் கைகோர்த்துப் பயணிப்பதை எப்படிப் பார்ப்பது? இதில் இந்தியக் கொள்கைகளில் மாற்றங்கள் ஏதாவது ஏற்படுமா?***

**பதில்**

சிங்கள பெரும்பான்மை, சிங்கள தேசம், சிங்கள பேரினவாதம் இவை அனைத்தும் அடங்கிய இலங்கை அரசு என்று தான் இந்தியா பார்க்கின்றது. தமிழர்களின் நலன் பற்றி பேசும் போது, தமிழர்கள் இந்தியாவிற்கு எதிராக செயற்பட மாட்டார்கள் என்று இந்தியாவிற்குத் தெரியும். சிங்களவர்கள் அதாவது அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், ஒரு சாதாரண சிங்கள பொதுமகன்கூட இந்தியாவை எப்படிப் பார்க்கின்றார்கள் என்பதும், தமிழர்கள் என்னும் போது, சாதாரண ஒரு ஈழத் தமிழ் குடிமகன் எவ்வாறு இந்தியாவை பார்க் கின்றான் என்பதிலும் மிகப் பெரிய ஒரு வித்தியாசம் இருக்கின்றது. இந்த மாற்றத்தை இந்தியா புரிந்து கொள்ளவில்லை என்று சொல்லவில்லை. ஆனால் இந்தியா அதை ஒரு பகடைக்காயாக பயன்படுத்தி விட்டது. இதனால் இந்தியாவிற்கு ஒரு முழுமையான அரசியல் களமாட முடியவில்லை. இவர்களை பகடைக்காயாக பயன்படுத்தி இந்தியாவும் மேற்கத்தய நாடுகளுடன் ஒரு பனிப்போரை நடத்தியது. தற்போது சீனாவைப் பற்றிய ஒரு கவனயீர்ப்பு இருக்கும் போதும் தமிழர்களை பகடைக்காய்களாக பயன்படுத்தியது. ஆனால் இப்போது தமிழர்கள் தற்போதும் இந்தியாவுடன் அதே உறவுடன் தான் இருக்கின்றார்களா என்றால், நிச்சயமாக கிடையாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த போது கூட முரண்பாடான கருத்துக்கள் இந்திய அரசாங்கத்துடன் இருந்தன. ஆனால் இந்தியாவிற்கு எதிராக இயங்க வேண்டும் என்று எப்போதுமே விடுதலைப் புலிகள் கூறியது கிடையாது. இந்தியா, அவர்களின் புவிசார் பார்வையில், ஈழத் தமிழ் மக்களை அரசியல் ரீதியாகப் பார்க்க வேண்டிய தருணம் இதுதான் என நினைக்கின்றேன். சரித்திரத்தில் ஏற்றத் தாழ்வுகள், வெற்றி தோல்விகள், பின்னடைவுகள், சோக நிகழ்வுகள் என நிறைய இருக்கின்றன. நாம் இவற்றை திரும்பிப் பார்க்கும் போது, இப்போது என்ன நடக்க வேண்டும் என்று நினைக்க வேண்டும். இந்திய அரசாங்கம் சிங்களப் பேரினவாதம் என்ற கொள்கையில் இருந்து விலகி நடுநிலை வகித்தல் வேண்டும். இதற்காக சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் தமிழர்களின் அரசியல் களம், இறையாண்மை தமிழர்களின் நிலம் போன்றவற்றை அதிகாரப் பகிர்வு மூலம் பெற்றுத் தரவேண்டும்.

ஆனால் 2009இற்குப் பின்னர் சீனாவின் ஆதிக்கம், அதேபோல் பேரினவாத அரசியல் இயக்கம், பேரினவாத அரசு, பேரினவாத தலைமை இவை அனைத்தையும் கூறும் போது, இந்தியாவிற்கு எதிரான மிகப்பெரிய முன்னெடுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. அடிப்படையான சாதாரண ஒரு சிங்கள மகனின் பார்வையும், அதிகாரத்திலுள்ள ஒரு சிங்களவனின் பார்வையும் ஒன்றாக இப்போது நிற்கின்றது. இப்படியிருக்கும் போது, இந்தியாவிற்கு இது ஒரு சரியான தருணம். தன்னுடைய திட்டத்திலும், கொள்கையிலும் தைரியமான ஒரு முன்னெடுப்பை மேற்கொள்வதற்கு இந்தியா தயாராகும் போது தான், அரசியல் புவிசார் கொள்கையில் ஒரு மாற்றம் வரும்.

**கேள்வி**

***சர்வதேச அளவில் சீனா, இந்தியா, இலங்கை என்ற முக்கோண அரசியலை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கலாம்?***

> **தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த போது கூட முரண்பாடான கருத்துக்கள் இந்திய அரசாங்கத்துடன் இருந்தன. ஆனால் இந்தியாவிற்கு எதிராக இயங்க வேண்டும் என்று எப்போதுமே விடுதலைப் புலிகள் கூறியது கிடையாது.**

**பதில்**

இலங்கையைப் பொறுத்தவரையில், இந்தியா, சீனா, இலங்கை என்ற முக்கோண அரசியல் வராது. காரணம் என்னவென்றால், இலங்கைக்கு மேற்கத்தைய நாடுகள், இந்தியா, சீனா இது ஒரு முக்கோணம். இந்த முக்கோணத்தில் நாம் எவ்வாறு இந்தியாவை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேற்கத்தய நாடுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சீனாவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றிருக்கும். ஆனால் மேற்கத்தய நாடுகளைப் பொறுத்தவரையில், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா என்ற ஒரு சின்ன ஒரு இடைவெளி இருக்கின்றது. அமெரிக்காவின் புவிசார் அரசியல் பார்வையிலும், ஐரோப்பிய நாடுகளின் புவிசார் அரசியல் பார்வையிலும் மாற்றம் இருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்காவின் பார்வையில் ஒத்த நிலையில் இருக்க வேண்டும் என்பது ஒரு அரசியல் முன்னோட்டம். இந்தியாவிற்கு மேற்கத்தய நாடுகளின் வீச்சும் ஓரளவிற்குத் தான் இதில் இருக்க வேண்டும். மிகப் பெரிய அழுத்தம் இருக்கக் கூடாது என்ற ஒரு காலம் மாறி, இப்போது மேற்கத்தய நாடுகள் ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும்கூட இந்த வட்டார அரசியலுக்கான பொறுப்பினை இந்தியாவிற்கு வழங்கி விட்டன. அதன் பின்னர் ஏதோவொரு திரைமறைவில் நின்று மேற்கத்தய நாடுகளுடன் இணைந்து இயங்கி வரும் இந்தியா, சீனாவின் பிரதான முன்னெடுப்புகளை வைத்து அதை தனக்கும் பாதிப்பு அல்லாமல் உலகப் பொருளாதாரத்திற்கு மிகப் பெரிய அதிர்வலைகளை உருவாக்கியுள்ள சீனாவை எப்படி தடுத்து நிறுத்துவது என்பது இந்தியாவின் நகர்வை வைத்து மேற்கத்தய நாடுகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த முக்கோண த்தில் ஒருபகுதி மற்றொரு பகுதியை நம்பித்தான் நகர்கின்றது.

இந்தியாவும் மேற்கத்தய நாடுகளும் சீனாவை எவ்வாறு பார்க்கின்றன. அதேபோல் இலங்கை சீனாவையும், பாகிஸ் தானை யும் ஒரு இணை நாடுகளாகவும், ஒரு ஆழமான நட்பு நாடுகளாகப் பார்க்கின்ற ஒரு காலமும் பத்தாண்டுகளுக்கு மேலாக தொட ங்கி விட்டது.

பாகிஸ்தானுடனான இலங்கை அரசாங்கத்தின் நட்பும், அதே போல் சீனாவிற்கு இருக்கின்ற நட்பு, இராணுவ ரீதியான உடன்படிக்கைகள், இராணுவ ரீதியாக இருக்கின்ற கட்டுமானங்கள் மட்டுமல்லாது, பொருளாதார ரீதியான முதலீடுகள் போன்றவற்றை பார்க்கும் போது, அவர்கள் செல்லக்கூடிய தடம் ஒன்று சீனாவை நோக்கியே உள்ளது. பாகிஸ்தானை எவ்வளவு பயன்படுத்தினாலும் அதை இந்தியா எதிர்கொள்ளும். ஆனால் சீனாவும் பாகிஸ்தானும் இலங்கையில் ஒன்று சேர்ந்து இராணுவ ரீதியாக வேலைகள் செய்கின்ற போது, தென்னிந்திய பகுதிக்கான பாதுகாப்பும், கண்ணோட்டமும் ஒரு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

**கேள்வி**

***கோத்தபயா ராஜபக்ஸ அதிபரான பின்னர் தமிழ் மக்களின் மனநிலைகள், மற்றும் இங்குள்ள அரசியல் கட்சிகளுடைய நிலைப்பாடுகளை எப்படி பார்க்கலாம்?***

**பதில்**

வடக்கு கிழக்கு பகுதியில் வாழும் எல்லா மக்களினதும் மனநிலைகளில், கோத்தபயா ராஜபக்ஸவை ஒரு பேரினவாதி, கொடுமைகளையும், வன்முறைகளையும் நடத்தியவர், வன்மம் நிறைந்த சிந்தனையுடையவர், தமிழர்களுக்கு எதிராக விளங்கியவன் என்ற மனதோடு, பெரும் துன்பங்களையும் சுமந்தவாறே கோத்தபயாவை பார்க்கின்றோம். இத்தனையும் நடத்தியது அவர் அரசியின் பின்னால் இருந்தே. இப்போது அரசியல் தலைமைப்பீடத்தில் இருக்கும் போது, எதிரியை நேரடியாக சந்திக்கும் ஒரு சந்தர்ப்பம் உண்டு. இதை நாங்கள் இப்போது அரசியல் ரீதியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, ஒரு புதிய தலைமையை உருவாக்கி, புவிசார் அரசியலை உள்ளடக்கி, இந்தியா போன்ற நாடுகளில் இப்போது நடக்கின்ற, நடக்க வேண்டிய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். இதில் தமிழகமும்கூட நேரடியாக அரசியல் பேசும் ஒரு வாய்ப்புக் களமாக மாற்றிக் கொள்ள வேண்டும். மிகப் பெரிய துயரம்கூட அரசியலிற்கான ஒரு வாய்ப்புக் களமாக மாற்றக்கூடிய திறன் ஒரு சமூகத்திற்கு இருக்க வேண்டும். ராஜபக்ஸ குடும்பத்தினருக்கோ அல்லது மகிந்த ராஜபக்ஸவிற்கோ, கோத்தபயா ராஜபக்ஸவிற்கோ பன்னாட்டு தளத்தில் தண்டனை பெற்றுத் தரவேண்டும் என்பது ஒருபக்கம் இருந்தாலும், ஒரு அரசியல் தீர்விற்காகவும் தமிழகம் பேசவேண்டும். ஒரு இனப்படுகொலை நடத்தியவன் என்பது மட்டு

தொடர்ச்சி 14ம் பக்கம்

# குடியுரிமை சட்டத் திருத்தத்தினால்
# கொதி நிலையில் இந்தியா



கல்யாணி

### போராட்டத்திற்கான காரணம்

இந்திய மத்திய அரசினால், குடியுரிமை திருத்தச் சட்ட மசோதா கடந்த 09ஆம் திகதி இரவு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவினால் பாராளுமன்ற மக்களவையில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதே மசோதா கடந்த 11ஆம் திகதி லோக்சபாவிலும் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவில், முஸ்லிம்களும், ஈழத்தமிழர்களும் புறக்கணிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.



பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மதரீதியான துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்டு இந்தியாவில் அடைக்கலம் புகுந்த இந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், ஜெயின் மதத்தினர், புத்த மதத்தினருக்கு இந்திய குடியுரிமை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் வங்காளதேசத்தில் இருந்து ஊடுருவி வந்துள்ள வங்காளிகள் லட்சக் கணக்கில் உள்ளனர். அவர்களுக்கு இந்திய குடியு ரிமை அளிக்கப்பட்டு விட்டால் வடகிழக்கு மாநில ங்களில் வாழும் பூர்வீக குடிமக்கள் தங்களது பெரும்பான்மைக்கும், பாரம்பரியத்துக்கும் ஆபத்து வந்து விடும் என்று பயப்படுகிறார்கள். எனவே குடியுரிமை சட்ட திருத்தத்துக்கு வடகிழக்கு மாநில மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

### வடகிழக்கு இந்தியாவில் போராட்டங்கள்

பாராளுமன்ற மக்களவையில் மசோதா நிறை வேற்றப்பட்ட மறுதினமே இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கின. அஸ்ஸாம், அருணாச்சலப் பிரதேசம், மேகாலாயா, மிசோராம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் மக்களும், மாணவர்களும், இளைஞர்களும் போராட்டத்தை முன்னெடுத்தனர். பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தும் போராட்டங்கள் தொடர்ந்தன. இந்தச் சட்டத்தை திரும்பப் பெறும் வரை போராட்டம் தொடரும் என்று போராட்டக்காரர் தெரிவித்தனர்.

உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற போராட்டத்தில் போராட்டக்காரர் மீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இதுவரை (20ஆம் திகதி வரை) 11பேர் உயிரிழந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் உயிரிழப்புகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

மேற்கு வங்கம் ஹவுரா மாவட்டத்தில் இணைய சேவைக்கு 17ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் ஒரு வாரத்திற்கும் மேலாக போராட்டம் நடைபெற்ற வண்ணமே உள்ளது. போராட்டத்தில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பனர்ஜி நேரடியாக பங்கு பற்றியுள்ளார்.

டெல்லி இந்தியா கேற் பகுதியில் 17ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கார்த்திக் மகெர் என்பவர் தீக்குளித்தார். அவரை பாதுகாப்புப் படையினர் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர். பீகாரில் 20ஆம் திகதி முழுக்கடையடைப்பு போராட்டம் நடைபெறுகின்றது. வடகிழக்கு மாநிலங்களில் தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற செயற்பாடுகளும் நடைபெறவில்லை.



### மாணவர் போராட்டங்கள்

டெல்லியில் உள்ள ஜாமியா மிலியா இஸ்லாமிய பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழக மாணவர்கள் குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து 15ஆம் திகதி தொடக்கம் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

ஜாமியா பல்கலைக்கழக வளாகத்தில் வலுக்கட் டாயமாக போலீசார் நுழைந்ததாகவும், மாணவர்களின் மீது தாக்குதல் நடத்தியதாகவும் பல்கலைக்கழகத்தின் தலைமை பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார். இதற்காக தாங்கள் நீதி மன்றம் செல்லவுள்ளதாகவும் பல்கலைக்கழக துணைவேந்தர் நஜ்மா அக்தர் கூறியுள்ளார். மேலும் பல்கலைக்கழக பணியாளர்கள், ஏராளமான மாணவர்கள் காயமடைந்து ள்ளதாகவும் அவர் கூறினார். காயமடைந்த 26 மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜாமியா மிலியா இஸ்லாமிய பல்கலைக்கழக மாணவர் ஒருவர் காவல்துறை மேற்கொண்ட தாக்குதலால் ஒரு கண்ணில் பார்வையை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை தொடர்ந்து நடைபெற்ற வன் முறையில், அரச பேருந்துகளுக்கு படையினரே தீவைத்து, கலவரத்தை தூண்டிவிட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான காணொளி சமூக வலைத் தளங்களில் பரப்பப்பட்டது.



ஜாமியா மிலிய இஸ்லாமிய பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் 17ஆம் திகதி வன்முறையாக வெடித்தது. டெல்லி சீலாம்பூரில் நடைபெற்ற வன்முறையில், பொலிஸ் சாவடிகள் தீவைத்துக் கொழுத்தப்பட்டன. பொலிசாருக்கும், போராட்டக்காரருக்கும் இடையிலான மோதலில் 35இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர்.

வன்முறை தொடராதிருக்க வட இந்திய பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளுக்கு 17ஆம் திகதியிலிருந்து ஜனவரி 5ஆம் திகதி வரை குளிர் கால விடுமுறை விடப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஆதரவாக 16ஆம் திகதி லக்னோ நட்வா கல்லூரி மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுடன் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

கடந்த 15ஆம் திகதி ஜாமியா மிலியா இஸ்லாமியா மற்றும் அலிகா முஸ்லிம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட மிருகத்தனமான பொலிஸ் வன்முறையை அமெரிக்காவில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் படிக்கும் சுமார்

தொடர்ச்சி மறுபக்கம்

## குடியுரிமை சட்டத்.... தொடர்ச்சி......




400 இந்திய மாணவர்கள் கண்டித்துள்ளனர். பொலிஸ் அடாவடியை தடுக்கும்படியும், அப்படி முடியாவிட்டால் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை பதவி விலகுமாறும் கேட்டுக் கொண்டனர்.

இந்த வன்முறையை விசாரிக்க உச்ச நீதிமன்றம் தாமாகவே முன்வந்துள்ளது. டெல்லி மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும், குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிராகவும் தமிழகத்திலும் போராட்டங்கள் வெடித்தன. சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் பங்குபற்றிய கார்த்திகேயன், சுப்பையா என்ற இரு மாணவர்களை பொலிசார் கைது செய்தனர். இவர்கள் மறுநாள் விடுவிக்கப்பட்டனர். இருந்தும் மாணவர்கள் வாளகத்திற்குள் உள்ளிருப்பு போராட்டத்தை நடத்தி வந்தனர்.




17ஆம் திகதி முதல் பல்கலைக்கழகம் விடுமுறை விடப்பட்டுள்ள போதும் விடுமுறை காலத்திலும் தாங்கள் வீடுகளுக்கு செல்வதில்லை எனக்கூறி இவர்கள், தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டி ருந்தனர். இதனால் பல்கலைக்கழகம் முழுவதும் பொலிசார் குவிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் 18ஆம் திகதி போராட்ட மாணவர்களுக்கு ஆதரவாக மக்கள் நீதிமைய கட்சி தலைவரும் நடிகருமான கமலஹாசன், அவர்களை சந்தித்து தனது ஆதரவைத் தெரிவித்தார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மாணவர்கள் 800பேரும் உணவின்றி தவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 18ஆம் திகதி இரவு உண்ணாவிரதம் மேற்கொண்ட 17 மாணவர்களை காவல்துறையினர் கைதுசெய்து அருகிலுள்ள திருவல்லிக்கேணி பொலிஸ் நிலையம் கொண்டு சென்று பின்னர் விடுவித்தனர். இதனால் மாணவர்களின் போராட் டம் முடிவிற்கு வந்தது.

தமிழ்நாட்டில் மாணவர்களின் போராட்டங்களைத் தவிர்ப்பதற்காக 21ஆம் திகதி முதல் ஜனவரி 01திகதி வரை அனைத்து பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக் கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் தங்கள் மாணவர் சக்தியை வெளிப்படுத்த முடியாதுள்ளனர்.

### போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்கள்

கர்நாடாகா முழுவதும் 18ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை 144 தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. 19ஆம் திகதி கர்நாடகா மங்களூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிசார் சுட்ட தில் இருவர் பலியாகியுள்ளனர். பெங்களூர் ஐஐரி கல்லூரி மாணவர்களின் போராட்டத்திற்கு காவல் துறையினர் மறுப்புத் தெரிவித்ததால், அவர்கள் தங்கள் காலணிகளை கல்லூரிக்குள் கழற்றி வைத்ததுடன், பதாகைகளையும் வைத்து நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

16ஆம் திகதி மாலை 4 மணியளவில், டெல்லியிலுள்ள 'இந்தியா கேட்' அருகே தனது கட்சியினருடன் வந்த பிரியங்கா காந்தி, "மாணவர்கள் மீதான தாக்குதலை நிறுத்துங்கள்" என்று எழுதப்பட்டுள்ள பதாகைகளுடன் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். மேற்கு வங்கத்தில் முதலமைச்சர் மம்தா பேனர்ஜி நடைப்பயணம் மேற்கொண்டார்.

17 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் திமுக தலைவர் ஸ்டாலின் குடியுரிமைத் தடைச்சட்டத்திற்கு எதிரான ஒரு கண்டனப் பொதுக் கூட்டத்தை நடத்தியிருந்தார். அதில் இந்த சட்ட மசோதாவை எதிர்க்கும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. அத்துடன் ஈழத் தமிழர் எங்கள் இரத்தம், காப்போம் காப்போம் ஈழத் தமிழர்களைக் காப்போம் என கோஷம் எழுப்பப் பட்டது.



மேலும், கேரளா, கர்நாடகா, புதுவை, ஆந்திரா, தெலுங்கானா ஆகிய பகுதிகளிலும் மாணவர்கள், அரசியல் அமைப்பினர், இளைஞர்கள் என போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மேலும் கேரளாவில் திருவனந்தபுரத்தில் பினராயி விஜயன் தலைமையில் 16ஆம் திகதி சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது.

மக்கள் நீதி மையம் கட்சியின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசன் நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது, பாகிஸ்தான் இந்துவிற்கு ஒரு நியாயம், இலங்கை இந்துவிற்கு ஒரு நியாயமா? என கேள்வி எழுப்பியிருந்தார். குடியுரிமைச் சட்டம் மக்களுக்கு எதிரான போர் என்றும் கூறியிருந்தார்.



இவர்களுடன் சீமான், திருமாவளவன், பழ.நெடுமாறன், வைகோ போன்ற ஈழ ஆதரவாளர்களும் தமது எதிர்ப்புக்களை பல்வேறு வகைகளில் தெரிவித்து வருகின்றனர்.

23ஆம் திகதி இந்த சட்டத்திற்கு எதிராக மாபெரும் பேரணி ஒன்றை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நடத்தவுள்ளார். இந்த பேரணியில், மாணவர்கள், பொதுமக்கள் என கட்சி, அரசியல் பேதமின்றி அனைவரையும் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவில் எந்தப் போராட்டத்திலும் மாணவர்களின் பங்கு அதிகமாக இருக்கும். இவர்களின் போராட்டத்திற்கு படையினர் எதிர்ப்புத் தெரிவித்தால், உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவை உற்று நோக்கும். எனவே தான் இந்தப் போராட்டத்தில் மாணவர் சக்தி ஒடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களை போராட விடாது கல்லூரி, பல்கலைக்கழகங்களுக்கு விடுமுறை அறிவித்துள்ளது. ஏற்கனவே ஒருமுறை இந்திய அரசு மாணவர் போராட்டத்திற்கு அடிபணிய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதே இதற்குக் காரணமாக அமைகிறது. 2017ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டுமென் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தில் மாணவர் சக்தியே வலுவாக அமைந்தது. இதனால், மத்திய அரசு அந்தப் போராட்டத்தை ஏற்று, ஜல்லிக்கட்டு நடைபெற அனுமதித்தது.



அதன் பின்னர் எந்தப் போராட்டமும் நீடித்ததாக கூறமுடியாது. ஏதோ ஒரு வகையில் போராட்ட த்தை அடக்கியே இந்திய மத்திய அரசு நடந்து வருகின்றது. அத்துடன் தனது தீர்மானத்திலும் அது மாற்றத்தைக் கொண்டு வராது என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும்.

# இந்திய இலங்கை ஒப்பந்தமும் 13 A திருத்தச் சட்டமும்

## ஒரு பார்வை



இந்திய இலங்கை ஒப்பந்தமும் 13A திருத்தச் சட்டமும் 30 வருடங்களுக்கு முன்னர் வரையப்பட்டவை. அதனை அடிப்படையாகக் கொண்டே இந்திய இராணுவம் இலங்கையில் கால்பதித்திருந்தது. இந்தியாவின் படை நடவ டிக்கை தோல்வியில் முடிந்த போதும், 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு இந்தியா தொடர்ந்து முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் போர் நிறைவடைந்த பின்னர் இந்த உடன்பாடு குறித்து மேலும் பல விவாதங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இந்த திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு என்ன நன்மையை பெற்றுத் தரும், அதனால் இந்தியா



வுக்கு என்ன நன்மை கிடைக்கும்? என்பதை இலகுவாக புரிந்து கொள்வதற்காக சில விபரங்களை சுருக்கமாகப் பார்ப்பது இங்கு பொருத்தமானது.

இந்த விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் தொலைக்காட்சி சேவை யொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

### 13A இன் கீழ் மாகாண சபைக்கு உள்ள அதிகாரங்கள்.

- மாகாண சபைக்கு நிலம் சார்ந்த எதுவித அதிகாரமும் இல்லை.
- நிதி, பணிக்கு அமர்த்துதல், பணியிலிருந்து நீக்குதல், பணிசெய்வோர், அவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கான முழு அதிகாரமும் இலங்கை அரசுக்கும் அதன் பிரதிநிதியான ஆளுநருக்கு மே உண்டு.
- 2014 இல் " வடமாகாண முதலமைச்சர் நிதி" என்று ஒன்றை உருவாக்க முன் மொழியப்பட்டதை ஆளுநர் நிராகரித்தார்.


  1987 இல் இந்திய பிரதமருக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி 13A பற்றி எழுதிய கடிதத்தில்,

  இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் சொல்லியிருப்பது போல, இந்திய அரசுடனும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் கலந்துரையாடி 13A திருத்தம் உருவாக்கப்படவில்லை.

- 13A இல் தமிழருக்காக எதுவுமில்லை.

### இந்திய இலங்கை ஒப்பந்தம் மற்றும் 13 A திருத்தத்தில் வடக்கும் கிழக்கும் இணைத்தல்

- வட- கிழக்கு வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் மக்களின் வாழிடங்கள் என்று இந்திய இலங்கை ஒப்பந்தம் கூறுகின்றது.
- வட- கிழக்கு இணைத்தல் அங்கு எடுக்கப்படும் கருத்து கணிப்பு ஊடாக செய்யப்பட வேண்டும் என்கிறது இந்திய இலங்கை ஒப் பந்தம்.
- 13 A திருத்தம் இந்த விடயத்தைப் பற்றி பேசவில்லை. நாடாளுமன்றத்தில் முடிவு எடுத்து இரண்டு மாவட்டங்களையும் ஒரு நிர்வாகத்தின் கீழ் தற்காலிகமாக கொண்டு வரலாம் என்று மட்டுமே சொல்கிறது. ஆக 13A திருத்தம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மீறிவிட்டது. அவசரகாலச் சட்டத்தின்கீழ் இரு மாவட்டங்களையும் இணைத்தது சட்ட மீறல் என்று 2007இல் இலங்கை உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



### 13 A திருத்தம் பற்றி இலங்கை என்ன சொல்கிறது

- ஒற்றையாட்சி அரசில், 13A அதியுச்சமான அதிகார பகிர்வு என்று 1987 இல் இலங்கை உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- அப்படியானால் ஒற்றையாட்சி அரசின் கீழ் 13A பிளஸ் பற்றி பேசுவது ஏமாற்றுவதல்ல வா?
- ஒற்றையாட்சி அரசசாசனத்தை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை ஆதரவும் ஒட்டு மொத்த தீவின் கருத்துகணிப்பில் வெற்றியும் தேவை.

### 13A இன்றும் அன்றும்

- எந்தவொரு இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தையிலும் 13A தொடக்கப் புள்ளியாக இருந்ததில்லை.
- 2009 பின்னரே இது மீண்டும் முன்னுக்கு வருகிறது.

  இதிலுள்ள எல்லா குறைபாடுகளையும் தாண்டி, இலங்கை உச்ச நீதிமன்றம் இது கடைசிப் புள்ளி என்று தீர்ப்பளித்த பின்னர் இது எப்படி தொடக்கப் புள்ளியாக இருக்கலாம்.

### இந்தியா எதற்காக 13A ஐ விரும்புகிறது

- இந்திய இலங்கை ஒப்பந்தம் இந்தியா வுக்கு சாதகமானது. அதன் பின்னிணைப்பில் இந்தியாவின் நன்மைக்கு எதிரான எந்தவொரு பாதுகாப்பு ஒப்பந்தத்திலும் இலங்கை அரசு இணைய முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

# தமிழ் பண்பாட்டு நிகழ்வாக இடம்பெற்ற வேல்ஸ் கல்விக் கூடத்தின் 10 ஆம் ஆண்டு நிகழ்வு



பிரித்தானியாவின் தெற்கு வேல்ஸ் மாநிலத்தில் உள்ள தமிழ் கலை பண்பாட்டுக் கல்விக்கூடம் (TACS Wales) தனது 10 ஆவது ஆண்டு விழாவை தமிழ் மக்களின் கலை பண்பாட்டு நிகழ்வாக நிகழ்த்தியது அங்கு வாழும் மக்களை மகிழ்ச்சியில் ஆழத்தி யுள்ளது.

வேல்ஸ் மாநிலத்தில் பரந்து வாழும் புலம் பெயர் தமிழ் மக்கள் தமது பிள்ளைகளுக்கு தமிழ் கலாச்சாரங்களையும், மொழியையும் கற்பித்து வருகின்றனர். அதற்கு உறுதுணையான தமிழ் கலைபண்பாட்டுக் கல்விக்கூடம் என்ற அமை ப்பும் செயற்பட்டு வந்தது.

தமிழ் மக்களின் மொழி மற்றும் கலை பண்பாட்டுக் கலாச்சாரங் களை பேணிப் பாதுகாக்கும் நோக்கத்துடன் செயற்பட்டுவந்த இந்த அமை ப்பு தனது 10 ஆவது ஆண்டு நிகழ்வை கடந்த 14 ஆம் நாள் சிறப்பாக கொண்டாடி யுள்ளது.

ஏறத்தாள 300 பேர் கலந்து கொண்ட நிகழ்வில் மக்கள் இறுதிவரை அமர்ந்திருந்து நிகழ் வுக்களைக் கண்டு களித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் தமிழ் மக்களின் பாரம் பரிய கலை வடிவங்களான கரகம், தாளலயம் பரதநாட்டியம், இசைப்பாடல்கள் உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பாரதியார் கவிதைகள் மற்றும் சிலப்பதிகாரம் போன்ற நாடகங்களும் மிக அழகாக மேடையேற்றப்பட்டு சிறுவர்கள் நாவில் அமுதத் தமிழ் விளையாடியது பார்த்தவர்களை அதிசயத்தில் ஆழ்த்தியது.

தமிழடி தேடி என்னும் தமிழ் வளர்க்கும் சிறுமிகள் அனனியா சகோதரிகளின் நிகழ்ச்சி இதற்கு மகுட மாய் அமைந்திருந்தது.

**தமிழ் கலை பண்பாட்டுக் கல்விக்கூடம் வேல்ஸ்**
**கார்டிஃப் தமிழ் மன்றம்**
**தமிழ்த் தேசியக் கல்விக்கூடம் வேல்ஸ்**
**சுவான்ஸ் நடனக்குழு**
***SwaRiGaMa* இசைக் குழு**

என ஈழத்தமிழரும் தமிழக தமிழ் மக்களும் ஒருங்கிணைந்து இந்த நிகழ்வை நடத்தியிருந்தனர். புலம்பெயர் தேசங்களில் பரந்து வாழும் தமிழ் மக்கள் தமது பிள்ளை கள் தமிழை கற்கவேண்டும், தமிழ் பண்பாட்டை பின் பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த முயற்சிகளை ஒற்றுமையாக மேற்கொண்டு வருகின்றனர்.

உலகில் எங்கு வாழ்ந்தாலும் தமிழர் தமது மொழி பண்பாடு பாரம் பரிய உணவு முறை மற்றும் உடைகள் என்பவற்றை பேணுவதும், தமிழின் உயர்வுக்கான தமிழ்ச் சங்கம் வளர்க்கும் மேடையை மேலும் உயிரோட்ட மாக்குவதும் முக்கியமானதாகும்.

தமிழ் இனத்தின் இருப்பையும் அடையாளங்களையும் பேணவும் உலக மக்களிற்கு அதனை பகிரவும் இது ஒரு முன்னோட்டமான எடுத்துக் காட்டாகும்.



## உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய தமிழீழ அணி ! இறுதிச்சுற்றுக்கு தேர்வு !!

கிழக்கு துர்கிஸ்தான் அணிக்கு எதிராக களமிறங்கிய தமிழீழ உதைபந்தாட்ட அணி, 5க்கு 0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி, CONIFA உலக உதைபந்தாட்ட கிண்ணத்துக்கான இறுதிச் சுற்றுக்கான தேர்வுப் போட்டிக்கு தேர்வாகியது.



சனிக்கிழமை பிரான்சில் இடம் பெற் றிருந்த போட்டியின் வெற்றியுடன் 2020ம் ஆண்டு மசடோனி யாவில் இடம்பெற இருக்கின்ற இறுதிச் சுற்றுக்கு தேர்வாகியுள் ளது.

பிரான்ஸ், பிரித் தானியா, கனடா, சுவி ஸ், ஜேர்மனி, நோர்வே, இத்தாலி என புலம்பெ யர் தேசங்களில் இருந்து இளையோர்கள் தமிழர் தேசத்தை பிரதிபலித்து, தமிழீழ உதைபந்தாட்ட அணியாக ஒருங்கிணைத்திருந்தனர்.

2013ம் ஆண்டு தோற்றம் பெற்ற CONIFA Confederation of Independent Football அமைப்பானது அரசுகளற்ற இனங்களுக்கு, உலக சிறுபான்மை தேசிய இனக் குழுமங்களுக்கும் என உலக எல்லைகளைக் கடந்த வகையில் ஆடுகளத்தினை உருவாக்கி அனைத்துலக கிண்ணத்துக்கான போட்டிகளை நடாத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடதக்கது..

ஈழத் தமிழினம் தன்னை வலிமையுள்ள ஓர் இனமாக மாற்றுவதற்கு தனது அனைத்து துறைசார் வளங்களை, நாடுகடந்த வகையில் ஒருங்கி ணைத்து வருகின்றது என்பதற்கு சான்றாக புலம்பெயர் தேசங்களில் இருந்து தமிழ் இளையோர்கள் ஈழத்தமிழர் தேசத்தை பிரதிபலிக்கும் வகையில் தமி ழீழ உதைபந்தாட்ட அணியாக பங்கெடுத்திருப்பதானது உற்சாகத்தினையும் நம்பிக்கையையும் தருகின்றது.



## இருப்பதைக் காப்பதற்கும்... தொடர்ச்சி...

"ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது – ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் - ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் - ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் - அவர் என்னை அனுப்பினார்" என இயேசு தன்னுடைய பிறப்பின் நோக்கைத் தெளிவுபடுத்திய வார்த்தைகள் கி.மு. 800 இன் பிற்பகுதியில் எசயா எழுதிய இஸ்ரேலிய விடுதலைக்கான அதே வார்த்தைகளாக உள்ளது.

**'கிறிஸ்து' அவன் என்றாலே**
**விடுதலைக்காக அனுப்பப்பட்டவன்**

ஆனால் நற்செய்தியில் 'கிறிஸ்து' என்னும் சொல்லே இயேசுவைக் குறிக்க 514 முறை பயன்படுத்தப்பட்ட சொல்லாக உள்ளது. கிறிஸ்து என்றால் கடவுளால் 'அருள் பொழிவு பெற்றவர்' என்று பொருள். இந்தக் கருத்தைக் கொண்டுள்ள 'மெசியா' என்கிற கிபூரு சொல்லுக்;கான கிரேக்க சொல்லே,'கிறிஸ்து'. கிறிஸ்து என்னும் பெயரைப் பயன்படுத்தியதன் வழி இஸ்ரேலியர்களுக்கு அவர்களை விடுவிப்பதற்கு கடவுள் அவர்களுக்கு ஒரு மெசியாவை அனுப்புவேன் என அளித்த வாக்குறுதியின் நிறைவே கிறிஸ்துவின் பிறப்பு என்பதை ஆணித்தரமாக மத்தேயுவும் லூக்காவும் எடுத்து விளக்குகின்றனர். இதனாலேயே இயேசு என்னும் சொல்லுக்கான பொருளாக நிறைவேற்றுபவர் - காப்பவர்- மீட்பர் என்கிற பொருள்கள் சுட்டப்பட்டு வருகின்றன.

**கடவுள் நம்மோடு இருக்கிறார் என்னும்**
**நம்பிக்கையே விடுதலைக்கு உறுதி தந்தது**

விடுதலைத் தலைவனாக வந்து மனிதன் வழியாகச் செயல்படுபவர் கடவுளே என்பது இஸ்ரேலியரின் நீண்டகால நம்பிக்கை. எனவே தங்களு டைய விடுதலைத் தலைவனைக் காணும் பொழுதெல்லாம் கடவுள் நம்மோடு இருக்கிறார் என நம்பிக்கை பெற்றனர் இஸ்ரேலியர்கள். "இம்மனுவேல்' என்னும் சொல்லின் பொருள் கடவுள் நம்மொடு இருக் கிறார் என்பதாகும். கிறிஸ்துவே அந்த "இம்மனுவேல்' என்பது நற்செய் தியாளர் மத்தேயுவின் எடுத்துரைப்பாக அமைந்தது.

**நிறைவுரை**

கிறிஸ்து பிறப்பு என்பது இஸ்ரேலிய மக்களதும் மண்ணினதும் விடுதலைக்கான வரலாற்றுச் சக்தி ஒன்றின் பிறப்பு. இந்தப் பின்னணியில் உலகெங்கும் உள்ள மக்களுக்கு " பசியாய் இருந்தேன் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் என் தாகத்தைத் தணித்தீர்கள். அன்னியனாய் இருந்தேன் என்னை ஏற்றுக் கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன் எனக்கு ஆடையணிவித்தீர்கள். நோயுற்றிருந்தேன் என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன் என்னைத் தேடி வந்தீர்கள். மிகச்சிறியோராகிய என் இச் சகோதர சகோதரிகளில் ஒருவருக்கு நீங்கள் செய்த பொழுதெல்லாம். எனக்கே செய்தீர்கள்" என அறிவித்த பிறப்பு கிறிஸ்துவின் பிறப்பு. என்னு டையது எல்லாம் உன்னுடையது எனத் தன் உயிரைக்கூட மனித விடுதலை க்காய் தந்த மகத்தான பிறப்பு கிறிஸ்துவின் பிறப்பு. எனவே கிறிஸ்துவின் சிந்தனைகளைச் செயற்படுத்துவதற்கான விழாவாக கிறிஸ்மஸ் விழாவை நாம் மாற்றினால் எந்தச் சர்வதிகார சூழலிலும் கடவுள் நம்மொடு இருக் கிறார் என்ற நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் "இருப்பதைக் காக்கவும் - இழந்ததை மீளப் பெறவும் முடியும்" என்பதே கிறிஸ்மசின் உண்மைச் செய்தியாக உள்ளது.



# வடகிழக்கு இந்தியாவில் தேசிய போராட்டங்கள்

மாலதி

பிரித்தானிய காலனியாளர்கள் இந்திய உப கண்டத்திலிருந்து 1947 இல் வெளியேறிய பின்னர், தொடர்ந்த ஒரு தசாப்தத்தில் இந்திய உபகண்டம் 14 மாநிலங்களாக மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு சில அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டன. காட்டப்பட்ட இந்திய வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் உள்ள பகுதியே இந்தியாவின் வடகிழக்கு பிரதேசம். இங்கு அசாம் என்ற ஒரு மாநிலம் மட்டுமே இக்காலத்தில் உருவாக்கப்பட்டது. இங்குள்ள பெருந்தொகையான ஏனைய மொழி பேசும் இனங்களும் மாநிலங்கள் கேட்டு போராடினார்கள். ஆனால் அப்போது இவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

இவர்களில் முதலில் தேசிய போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக தொடர்ந்தவர்கள் நாகா மக்கள். அன்றைய அசாம் மாநிலத்தில் ஒரு பகுதியை நாகாலாந்து மாநிலமாகவும் பின்னர் தனிநாடாகவும் பிரிப்பதற்கு தொடர்ந்து போராடுகிறார்கள். பல்வேறு வடகிழக்கு இனங்களின் தேசிய போராட்டங்களுக்கு தாய் போராட்டமாக நாகா மக்கள் போராட்டம் திகழ்கிறது என்பார்கள். இவர்களின் போராட்டத்தின் பயனாக நாகாலாந்து ஒரு மாநிலமாக இன்று பிரிக்கப்பட்டு விட்டது. அவர்கள் தொடர்ந்து தனிநாடு கோரி போராடுகிறார்கள். நாகா மக்களின் போராட்டம் உலகிலேயே நீண்ட காலம் நீடிக்கும் போராட்டம் என்கிறார்கள். அவர்களை பின்பற்றி பல்வேறு வடகிழக்கு இனங்கள், மாநில கோரிக்கையை முன்வைத்தும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தும் ஆயுதப்போராட்டங்கள் நடத்துகின்றன. இப் போராட்ட அமைப்புக்களின் அட்டவணையை இங்கு பார்க்கலாம்.

சிறீலங்காவின் பயங்கரவாத தடைச் சட்டம் (P T A) போலவே வடகிழக்கிலும் மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கு ஒரு சட்டத்தை (A F S P A) இந்தியா அமுல்படுத்துகிறது. இதே போன்ற ஒரு சட்டம் காஷ்மீரிலும் நடைமுறையில் இருக்கிறது என்பதும் இங்கு குறிப்பிட வேண்டும். இச்சட்டத்தின் கீழ் இராணுவ அதிகாரிகள் வாறன்ட் இல்லாமல் ஒருவரை கைது செய்யவும், வீடுகளுக்குள் நுழைந்து தேடுதல் நடத்தவும், கூட்டமாக சேர வேண்டாம் என்ற ஆணையை மீறுவோர் மேல் துப்பாக்கி சூடு நடத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இச்சட்டம் இந்த அதிகாரிகளுக்கு அவர்கள் இழைத்த குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்தும் விதிவிலக்கு கொடுக்கிறது. சிறிலங்காவின் சட்டம் போலவே இருக்கிறதல்லவா?

### மணிப்பூரின் மலோம் படுகொலையும் ஐரோம் சர்மிளாவும்

இம்மாதிரியான சட்டம் இருக்கும் போது தமிழீழத்தில் நடந்தது போலவே வடகிழக்கிலும் படுகொலைகளுக்கு பஞ்சமில்லை. 2000ம் ஆண்டு நவம்பர் 2ம் திகதி மணிப்பூரில் உள்ள மலோம் பேருந்து தரிப்பு நிலயத்திற்கு அருகில் ஒரு இராணுவ வாகன தொடர்மீது தாக்குதல் நடந்தது. இதற்கு பழிவாங்கலாக இராணுவம் அவ்விடத்தை சுற்றி கண்மூடித்தனமாக துப்பாக்கிசூடு நடத்தியது. 10 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். தொடர்ந்து கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர், கிராமத்தவர்களை துப்பாக்கி முனையில் நடத்திச்சென்று நிலத்தில் படுக்கச் செய்தனர்.

இப்படுகொலையை தொடர்ந்து, அப்போது 28 வயதாக இருந்த ஐரோம் சர்மிளா என்ற பெண் A F S P A சட்டத்தை நீக்குமாறு கோரி தண்ணீரும் அருந்தாத உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார். தற்கொலைக்கு முயற்சிக்கிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டு இவர் கைது செய்யப்பட்டு குழாய் மூலம் இவருக்கு உணவு ஊட்டப்பட்டது. அன்றிலிருந்து இவர் பல தடவைகள் கைதுசெய்யப்பட்டும் விடுதலை செய்யப்பட்டும் வருகிறார். அரசின் கொடுமைகளுக்கு எதிரான பொதுமக்கள் போராட்டத்தின் குறியீடாக இன்று சர்மிளா போற்றப்படுகிறார்.

| | வடகிழக்கு | அசாம் தவிர்ந்த |
|---|---|---|
| மக்கள் தொகை | 38 மில்லியன் | 12 மில்லியன் |
| இந்துக்கள் | 58% | 39% |
| இஸ்லாமியர்கள் | 23% | 5% |
| கிறிஸ்தவர்கள் | 16% | 46% |
| பழங்குடி சமயங்கள் | 2% | 7% |
| ஏளையவை | 1% | 3% |

### வடகிழக்கின் மேலதிக பின்னணி

பிரித்தானிய காலனிய காலத்திலேயே பாதுகாப்பிற்கான "முன்னணி எல்லையாக" வடகிழக்கு பார்க்கப்பட்டது. இதனால் இது "தவிர்க்கப்பட வேண்டிய", "வளர்ச்சியற்ற", "அதிதூரத்திலுள்ள" இடமாகவே கையாளப்பட்டது. பின்னரும் இந்திய மத்திய அரசால் அவ்வாறே கையாளப்பட்டது, படுகிறது.

இந்த வடகிழக்கு பகுதி மக்கள் ஒரு போதும் இந்திய அரசியல்வாதிகளின் பின்னால் ஒருங்கிணையவில்லை. அதனால் இவர்களுக்கு இந்திய ஆட்சி ஒரு வெளியார் ஆட்சியாக, இன்னுமொரு காலனியாளர் ஆட்சியாகவே தோன்றுகிறது. பாகிஸ்தான்

### "இந்தியனே வெளியேறு" வடகிழக்கின் விடியலுக்கான முழக்கம் பயங்கரவாதமும் இந்திய அரசும் வரலாற்றுப் படிப்பினைகள்

பிரிவினைக்கு முன், வங்காளம் (அன்று கிழக்கு பாகிஸ்தான்), மியன்மார் மற்றும் வடகிழக்கு ஒருங்கிணைந்த ஒரு பொருளாதார சந்தை வலயமாக இருந்து வந்துள்ளது. பாகிஸ்தான்-வங்காளம் பிரிவினைக்கு பின்னர், வங்காளத்திற்கும் வடகிழக்கிற்கும் இருந்த தொடர்பு அறுபட்டு விட்டது.




முன்னர் ஒருங்கிணைந்த வலயமாக இருந்த பிரதேசம் வேற்று நாட்டு எல்லைகளால் பிரிக்கப்பட்டு இப்போது வங்காளம், சீனா, மியன்மார் போன்ற நட்புறவற்ற நாடுகளிடையே கூறு போடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இந்தியா | 1,324,009,090 |
| பாகிஸ்தான் | 202,785,000 |
| வங்காளம் | 158,762,000 |
| மியன்மார் | 56,480,000 |
| ஆப்கானிஸ்தான் | 37,521,000 |
| நேபால் | 28,038,000 |
| சிறிலங்கா | 22,480,000 |
| புட்டான் | 760,000 |
| மாலைதீவு | 345,000 |
| மொத்தம் | 1,831,180,090 |

வடகிழக்கு மக்கள் தோற்றத்திலும் வடஇந்தியர்கள் போலல்லாமல் தென்கிழக்காசிய மக்களை போலிருப் பார்கள். வடகிழக்கு மக்களிடையே தான் அதிகமான விகிதாசாரத்தில் (30 வீதம்) பழங்குடி மக்கள் உள்ளார்கள். திரிபுரா மற்றும் அசாம் தவிர்ந்த ஏனைய 5 மாநிலங்களில் பழங்குடி மக்கள் 60 விகிதாசாரத்தில் உள்ளார்கள். இதுவும் ஏனைய இந்தியாவில் இருந்து இவர்களை வேறுபடுத்துகிறது. காலனிய காலத்தில் இவர்களிடையே கிறிஸ்தவ மதம் அதிகம் பரவியது.

தொடர்ச்சி மறுபக்கம்

## வடகிழக்கு.... தொடர்ச்சி......

அட்டவணையில் காட்டப்படுவது போல இதிலும் இவர்கள் ஏனைய இந்தியாவிலிருந்து வேறுபடுகிறார்கள்.

வடகிழக்கு மக்களின் போராட்டங்களால் 1963இல் நாகாலாந்து மாநிலம் முந்தைய அசாம் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டதை தொடர்ந்து அசாம் மாநிலம் மேலும் பிரிக்கப்பட்டு இன்று ஏழு மாநிலங்களாக உள்ளன. மணிப்பூர், திரிபுரா மற்றும் மேகாலயா 1972 இலும், அருணாசலப் பிரதேசம் 1975 இலும், மிசோரம் 1987 இலும் மாநிலங்களாயின.

இந்திய தேசிய போராட்டங்கள் பற்றிய போராட்ட ஆதரவு ஆக்கங்கள் கீற்று மற்றும் வினவு போன்ற தமிழ் நாட்டு இணைய தளங்களில் தமிழிலும் படிக்க கிடைக்கின்றன. வடகிழக்கு போராட்டங்கள் பற்றிய பின்வரும் இரண்டு ஆக்கங்களும் படிக்க வேண்டியவை.

### ஐரோப்பிய காலனியமும் தேசிய போராட்டங்களும்

500 ஆண்டுகள் நீடித்த ஐரோப்பிய காலனியம் ஒட்டுமொத்த உலகை எவ்வாறு புரட்டிப் போட்டது என்பதற்கு வடகிழக்கும் ஒரு நல்ல உதாரணம். காலனியாளர்களின் வசதிக்கேற்ப வடகிழக்குடன் இணைந்த பரந்த பொருளாதார வலய பிரதேசம் இன்று மியன்மார், பாகிஸ்தான், வங்காளம் என்ற இன்றைய நாடுகளின் எல்லைகளால் துண்டாடப்பட்டுள்ளது. இது போலவே தமிழ்நாடு ஈழத்தமிழர் இணைந்த பொருளாதார வலயம் இந்தியா சிறிலங்கா என்ற இருநாட்டின் எல்லைகளால் துண்டாக்கப்பட்டது. இவ்வாறு துண்டாடப்பட்ட பின்னர், அன்றைய மக்களின் பொருளாதார செயற்பாடுகளுக்கு கள்ளக் கடத்தல் என்ற பெயரும் சூட்டப்பட்டது. குர்திஸ் மக்களின் நிலமும் இவ்வாறே ஐந்து நாடுகளிடையே துண்டாடப்பட்டது.

காலனியம் உருவான ஐரோப்பாவில் ஒவ்வொரு மொழி பேசும் இனத்திற்கும் ஒரு நாடு உள்ளது. கட்டலான் மற்றும் பாஸ்க் தேசம் தவிர இன்று அங்கு தேசிய போராட்டங்கள் மிகவும் குறைவு. பிரித்தானியா ஆட்சி செய்யும் ஸ்கொட்லாந்தும் வேல்ஸ்சும் பிரிந்து போவ தற்கு ஆர்வம் காட்டுகின்றன. அயர்லாந்தின் வடக்கு பிரதேசம் மட்டுமே ஒரு மாபெரும் போராட்டத்தின் பின் ஓய்ந்திருக்கிறது. ஒட்டு மொத்தமாக 600 மில்லின் மக்கள் தொகையை மட்டுமே கொண்டுள்ளது 50 ஐரோப்பிய நாடு கள். ஆபிரிக்காவிலும் கூட 1200 மில்லியன் மக்கள் தொகையை கொண்டுள்ளது 55 நாடுகள். இவற்றோடு 8 தெற்காசிய நாடுகளின் மக்கள் தொகையை ஒப்பிட்டால் இங்கு ஏன் அதிக தேசிய போராட்டங்கள் தொடர்கின்றன என்ப தற்கு ஒரு விளக்கம் கிடைக்கிறது. இதனாலோ தான் ஐரோப்பிய காலனியம் தங்கள் வசதிக் கேற்ப உலகெங்கும் உருவாக்கிய காலனிகளில் இன்றும் தியாகங்களும் வீரங்களும் நிறைந்த போராட்டங்கள் தொடர்கின்றன.

## ஒரு அரசியல்... தொடர்ச்சி...

மல்லாமல், ஒரு அரசியல் தீர்விற்கும் தமிழகம் பேசவேண்டும்.

பேசும் போது, ஒரு சிங்களப் பேரினவாத த்திற்கு தமிழ்ப் பேரினவாதம் ஈடாகாது என் பது எனது கருத்தாகும்.

தமிழ்ச் சமூகமும் கூட ஜனநாயக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஓர் அரசியல் போர் நடத்த வேண்டிய காலம். அரசியல் போரும் கூட ஒரு போர் தான். அதற்கான தடங்களை உருவாக்க வேண்டும்.

அதற்கான அரசியல் ஆயுதங்களை நாம் வளமாக்க வேண்டும். இங்கு அரசியல் ஆயுதம் என்பது சிந்தனைக்களம் ஆகும். நமது புவிசார் அரசியல் வளம், நம்முடைய மக்கள் திறன், கல்வி, பொருளாதாரம், புலம்பெயர் தமிழ்ச் சமூகம், அவர்களின் விழிப்புணர்வுடன் கூடிய அரசியல் பங்களிப்பு, உள்நாட்டில் இருக்கின்ற உரிமைகளைப் பயன்படுத்தி புதியதொரு தலை மையை உருவாக்குவதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய அரசியலால் ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்து ஆராய வேண்டும். அவர்களால் முக்கிய முன்னெ டுப்புகள் இல்லையென்றால், அவர் களை மாற்றுவதற்கு தயாராக இருக்க வேண்டும். இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்த வேண் டும்.

**கேள்வி**

**இலங்கையிலிருக்கும் தமிழ் மக்கள் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்? எதற்காக தயார்ப்படுத்தப்பட வேண்டும்**

**பதில்**

நாம் நேரடியாக எதிரியுடன் உரையாடிக் கொண்டிருக்கின்றோம் என்ற உணர்வு இருக்க வேண்டும். திரைமறைவில் நின்று நிலங்களை திருப்பித் தரவேண்டும், அதிகாரப் பகிர்வைப் பற்றி பேசுவோம் என்று கூறக்கூடாது. 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பற்றி கோத்தபயா ராஜபக்ஸ பேச விரும்பவில்லை. அத்துடன் நிலங்களைப் பற்றியும் பேச விரும்பவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை குறி த்து எனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டார். காணாமல் ஆக்கிய மனிதனே அதைப் பற்றி தனக்குத் தெரியாது என்று கூறுகின்ற போது, நாம் என்ன எதிர்பார்க்க வேண்டும் என்று தமிழ்ச் சமூகம் யோசிக்க வேண்டும்.

எங்களுக்கு ஒன்றுமே கிடைக்காது என எதிர்பார்த்தால், ஒன்றுமே கிடைக்காது. ஒன்று மே கொடுக்க முடியாது என்று சொல்பவரிடம், எமக்கு எல்லாமே வேண்டும் என்று கேட்கும் துணிவு எமது சமுதாயத்திடம் வரவேண்டும். அப்படியிருந்தால் இந்த சமூகம் அரசியல் களம் ஆடும்.

(முற்றும்)

## சரியான தரப்புக்க...தொடர்ச்சி....

விளிம்பிலேயே தேசியத் தலைவர் அதிமேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் அப்போரா ட்டத்தை மௌனித்திருந்தார். ஆனால் துரதிஸ்ட வசமாக அதற்குப் பிற்பாடு அதை வைத்து பேரம் பேசி, தமிழ் மக்களின் விடுதலையை முன் னெடுக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டி ருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான் என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோ க்கங்களையெல்லாம் மறந்து, கொள்கைகளை த் துறந்து சில வல்லரசு நாடுகளின் பின்னணி யில் அரசாங்கத்தின் வலைக்குள் சிக்கி தமிழ் மக்களின் இன நலன்களுக்கு முரணாக செயற் பட்டது. இதனால் பேரம் பேசி ஈழத்தில் அரங் கேறிய இனப்படுகொலையை வலியுறுத்தி தீர்வைப் பெறக்கூடிய வாய்ப்பிருந்தும் இனப் படுகொலை என்பதை பேசுவதற்குக்கூட தயாராக இராத திராணியற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, வெறும் யுத்தக் குற்றங்களுக்குள் மாத்திரம் எங்கள் இனப்படுகொலையை முடக்கி யதன் விளைவாக த்தான் தற்போது தமிழ்ச் சமூகம் இரண்டும் கெட்ட ஒரு நிலையில் காணப்படு கின்றது.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் எமது இனவிடுதலையை அடைவதற்கான பல கதவுகள் திறந்திருந்தது. ஆனால் அவற்றையெல்லாம் தமிழ ர்களுடைய தலைமையாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூடிவிட்டது. ஆனால் இன்னும் முற்றாக அந்த வாய்ப்பு இல்லாமல் போகவில்லை. இன்றுகூட தமிழ் மக்கள் சரியான பிரதிநிதிகளை தெரிவு செய்தால், நிச்சயமாக நாங்கள் அந்த வரலாற்றுக் கடமையை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம். ஈழத்தில் அரங்கேறியது இனப் படுகொலை என்பதை நாங்கள் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபித்தால், எங்களுடைய இந்த விவகாரம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையையும் தாண்டி ஐ.சி.சி (International criminal court) என்று சொல்லப்படுகி ன்ற சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்ப டுத்தப்பட வேண்டும் . அல்லது ஈழத்தில் அரங்கே றிய இனப்படுகொலையை விசாரிப்பதற்கு ஒரு விசேட தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட வேண் டும். இத்தகைய இரண்டில் ஒன்று அமைக்க ப்படு மிடத்து, நிச்சயம் ஈழத்தில் அரங்கேறியது இனப் படுகொலை என்பது நிரூபிக்க ப்படும். அதற்கான ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவற்றின் விளைவாக நிச்சயமாக நாங்கள் எங்கள் தமிழின த்திற்கு ஓர் அதியுச்ச சமஸ்டித் தீர்வை யாவது நாங்கள் பெறக்கூடிய வாய்ப்பு காணப் படுகின்றது. ஆனால் இவற்றையெல்லாம் சரியான முறையில் கையாளாத தற்போதைய தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் துரோகத் தலைமைகளின் செயற் பாட்டினால், எமது விடுதலைப் போராட்டம் கொச் சைப்படுத்தப்படுவது மட்டுமல்லாமல், தமிழ் மக் களின் விடுதலையானது காட்டிக் கொடுக்கப்ப டுகின்றதென்பது கசப்பான கவலையான உண்மை.

## தூதரக அதிகார... தொடர்ச்சி...

### மர்ம இல்லத்தில் நடந்த சித்திரவதை

குறிப்பிட்ட இல்லத்திற்கு சென்ற தூதர கத்தின் அதிகாரி அங்கு வந்த இனந்தெரியாத சிலரால் கடுமையான பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக தெரிகின்றது. இவ்வாறான சித்திரவதையின் மூலமாக அவரிடமிருந்து தகவல் களை பெற அவர்கள் முற்பட்டு இருக்கின்றார்கள். குறிப்பாக நிசாந்த சில்வாவுக்கு வீசா வழங்கப் பட்டது எவ்வாறு என்பதும் வேறு யார் யார்

அவ்வாறு விசாவை பெற்றிருக்கிறார்கள் என்பதும் அவரிடம் வினவப்பட்ட கேள்விகளா கும். இரண்டு பிள்ளைகளின் தாயான குறிப்பிட்ட பெண்மணி இவற்றிற்கு பதில் அளிப்பதற்கு மறுத்தபோது பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப் பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் மூன்று மணி நேரத்திற்கு பின்னர் விடுவிக்கப்பட்ட அவர் அதுகுறித்து தூதரக அதிகாரிகளுக்கும் முறைப்பாடொன்றை செய்திரு க்கின்றார்.

முக்கியமான ஒரு உண்மையை அவர் மறைத்தது தற்போது இலங்கை அரசாங்கத்திற்கு சாதகமாகியிருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு இடத்து க்கு தான் சென்றதை மறைத்து அவர் காரில் கடத்தி சென்று தகவல்கள் பெறப்பட்டதாக மட்டும் சொல்லியிருக்கின்றார்.

இதுதான் நடைபெற்றது என்பதை இப்போது விசாரணையாளர்கள் தெரிந்திருக் கின்ற போதிலும், கூட வெறுமனே கடத்தல் எதுவும் இடம்பெறவில்லை என்பதை மட்டுமே சொல்லி வருகிறார்கள். தம் மீது அபாண்டமாக பழி சுமத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொழில்நுட்ப ரீதியாக ஆதாரப்பூர்வமாக முறி யடிக்கப்பட்டு இருக்கிறது என்பதை சொல்லி தம்மை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கத் தரப்பு முற்படுகின்றது. வெள்ளைவான் கடத்தலைவிட மிகவும் மோசமான ஒரு சம்பவம் இடம்பெற்று இருக்கின்ற போதிலும் கூட, அதனைப் பற்றிப் பேச முடியாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது.

"கடத்தல் நடக்கவில்லை. அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் இப்போது அம்பலம்" என்ற பிரசாரத்தை மட்டும் கொழும்பு தொடர்ந்தும் சொல்லிவரும் நிலையில், எப்படி இந்தச் சிக்கலைக் கையாள்வது என்பதில் சுவிஸ் தரப்பு தடுமாறுவதும் தெரிகின்றது. இதற்காக உயர் இராஜதந்திரி ஒருவரை சுவிட்சர்லந்து அரசாங்கம் அவசரமாக கொழும்புக்கு அனுப்புகின்றது. இந்தப் பிரச்சினையை அவர் எப்படிக் கையாளப் போகின்றார் என்பதையிட்டு அடுத்தவாரம் பார்ப்போம்.



# காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றம் விவசாயத்தில் அதிக தாக்கத்தை உண்டுபண்ணுகின்றது. விவசாயிகள் அதிகம் பாதிக்கப்படுவது மட்டுமல்லாது, உண வுப் பொருட்களுக்கும் பற்றாக்குறை ஏற்படும் நிலை ஏற்படலாம். காலநிலை மாற்றத்தில் இருந்து தப்பிப் பிழைப்பதற்காக பல உயிரினங் கள் இடம் பெயர்கின்றன, சில தாவர மற்றும் விலங்கினங்கள் அழிந்து போகின்றன. நீர் பற்றக் குறை ஏற்படுவதுடன், வெப்ப அதிகரிப்பினால் கடல் நீரின் அமிலத்தன்மை அதிகரிப்பதால் பவளப்பாறைகளும் அழிவைச் சந்திக்கின்றன.

அதேசமயம் புதிய களைகளும், பூச்சிகளும் பயிர்களைத் தாக்குகின்றன, இதனால் அமெரிக்க விவசாயிகள் ஏறத்தாழ ஒரு பில்லியன் டொலர் களை செலவிட வேண்டியுள்ளதாக அமெரிக்கா வின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவி த்துள்ளது.

நாம் எமது எதிர்காலச் சந்ததியை காப்பாற்ற போராட வேண்டும். மனிதர்களால் ஒரு கால நிலை மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதை நாம் கடந்த 200 ஆண்டுகளில் உறுதிப்படுத்தியுள் ளோம். ஆனால் தற்போது அதனை மாற்றிய

## மனிதனின் செயற்பாட்டுக்கு எதிரான இயற்கையின் போர்

பூமி வெப்பமடைதலும், காலநிலை மாற்றமும் உலகில் உள்ள மனிதர் களை மட்டுமல்ல ஒட்டுமொத்த உயிரினங்களையும் அச்சுறுத்தும் ஒரு மிகப்பெரும் சவாலாக மாற்றம் பெற்று வருகி ன்றது.

இந்த அச்சுறுத்தலின் ஆபத்தைத்தான் சுவீடன் நாட்டைச் சேர்ந்த 16 வயதுள்ள சிறுமி கிரேற்றா தண்பேக் இந்த மாதம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை தொடர்பான மாநாட்டில் ஆற்றிய தனது உரையில் தகுந்த ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளார்.

கடந்த 18 மாதங்களாக உலகமெங்கும் சென்று பரப்புரைகளை மேற்கொண்டுவரும் கிரே ற்றா அரசியல் தலைவர்களும், உலக அமைப்பு க்களும் இதனைக் கட்டுப்படுத்த எதுவுமே செய்ய வில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.



**பூகோள வெப்பநிலையின் அதிகரிப்பு என்பது என்ன?**

சூரியனில் இருந்து வரும் மின்காந்த கதிர் வீச்சுக்களில் பல கதிர்கள் வளிமண்டலத்தினால் உறிஞ்சப்படுகின்றன, சில தெறிப்படைகின்றன, சில உள்ளே வருகின்றன. உள்ளே வரும் கதிர் வீச்சுக்களால் நாம் பல நன்மைகளைப் பெறுகி ன்றோம், தாவரங்கள் உணவை தயாரிக்கின்றன, அதனை நம்பி பல உயிரினங்கள் வாழ்கின்றன.

சூரியனில் இருந்து வரும் மின்காந்த அலை களில் குறைந்த அலை நீளம் கொண்ட அகச்சிவப்பு கதிர்களை பூமியின் வாயு மண்டலம் தடுப்ப தில்லை. அந்த கதிர்கள் பூமியை அடைவதால் பூமி வெப்பமடைகின்றது. வெப்ப மடைந்த பூமி அதிக அலை நீளம் கொண்ட அகச்சிவப்புக் கதிர்களை வெளிவிடுகின்றது.

ஆனால் பூமியின் வளிமண்டலத்தில் உள்ள பச்சைவீட்டு வாயுக்களான (*Green house gases*) கார் பன் டைஒக்சைட், நீராவி, மீதேன் என்பன இந்த அதிக நீளம் கொண்ட அகச்சிவப்புக் கதிர்களை பூமியில் இருந்து வெளியேற அனுமதிப்பதில்லை. அவை உறிஞ்சப்பட்டு பூமிக்குள் முடக்கப்படுவ தால் பூமியின் வெப்பம் அதிகரித்துச் செல்கி ன்றது.

இதில் மனிதர்களின் செயற்பாடுகள் எவ் வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என நீங்கள் கேட்கலாம். மேற்கூறப்பட்ட வாயுக்களில் கார்பன் டைஒக்சைட்டு, மீதேன் போன்றவை எரிபொருள் பாவனை, காடுகளை அழித்தல், உணவுக்காக அதிக கால்நடைகளை வளர்த்தல், சில வகையான பயிர் களை அதிகம் பயிரிடுதல் போன்ற செயற்பாடு களால் ஏற்படுகின்றன.

அதேசமயம், பல நாடுகளின் துரித அபிவிரு த்தியும், வியாபார நோக்கமும், பாதுகாப்பு நடை முறைகளும் அதிக பச்சைவீட்டு வாயுக்களை உரு வாக்குகின்றன. உதாரணமாக 6 விதமாக வாயுக் களை படைத்துறை சார்ந்த நடவடிக்கைகள் உருவா க்குவதாக *Scientists for Global Responsibility* என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

சில நாடுகள் மேற்கொள்ளும் இன அழிப்புக் களுக்கும் இதில் பங்குகள் உண்டு. உதாரணமாக தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் சிறிலங்கா அரசு தேவையற்ற முறையில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காடுகளையும், இயற்கை வளங்க ளையும் அழித்து வருகின்றது. அவர்கள் உலகின் நன்மையையோ அல்லது உயிரினங்களின் அழிவு தொடர்பாகவோ சிந்திப்பதில்லை.

**ஆர்த்திகன்**

பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் முன்னர் நன்மை கிட்டடிய போதும், தற்போது அது தீமை யாக உருவெடுக்க ஆரம்பித்துள்ளது. உதாரணமாக பூமியை வந்தடையும் எல்லா வெப்பக் கதிர்களும் பூமியை விட்டு வெளியேறினால் பூமி அதிக குளிர் நிறைந்ததாக காணப்படும்.

அதாவது இந்த வாயுக்கள் வெப்பத்தை தக்க வைப்பதால் தான் இங்கு உயிரினங்கள் வாழ் கின்றன.

ஆனால் அதிகரித்துச் செல்லும் வெப்ப மானது தற்போது தீமையான விளைவுகளை ஏற்ப டுத்தும் நிலைக்குச் சென்றுள்ளது.

**வெப்ப அதிகரிப்பினால் என்ன பிரச்சனைகளை இந்த பூமி எதிர்நோக்குகின்றது?**

பூமி வெப்பமடைவதால் காலநிலை மாற் றம் ஏற்படுகின்றது, சில பகுதிகள் அதிக குளிரான



தாகவும், சில பகுதிகள் அதிக வெப்பமுடை யனவாகவும் மாற்றம் அடைகின்றன. அந்தாட்டிக் கடற்பகுதியில் உள்ள பனிப்பாறைகள் உருகுவ தால் கடல் நீர்மட்டம் உயர்கின்றது. சில பகுதிகள் வறட்சியாகவும் சில பகுதிகள் வெள்ளப்பெருக்கு நிறைந்தனவாகவும் காணப்படுகின்றன.

மைக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என சுற்றுச் சூழல் நோயல் கழகத்தின் தலைமை அதிகாரியான ஜேம்ஸ் பிவென் தெரிவித்துள்ளார்.

தொழிற்துறை புரட்சி ஒன்று பூமியில் ஏற்பட்ட பின்னர் ஏறத்தாள 30 விகிதம் கார்பன் டைஒக்சைட்டு வளிமண்டலத்தில் அதிகரித்து ள்ளது. 1995 ஆம் ஆண்டுக்கு பின்னர் 20 ஆண்டுகள் கடுமையான வெப்பத்தை பிரித்தானியா சந்தித்து ள்ளது. வறட்சி தொடர்பான சம்பவங்கள் 330 விகிதத்திற்கு அதிகரித்துள்ளது. கடல் நீர் மட்ட த்தின் உயர்வானது, கடந்த 20 வருடங்களில் மிக வும் அதிகரித்துள்ளது, இது அதற்கு முன்னயை 80 வருடங்களுடன் ஒப்பிடும் போது இரண்டு மடங்கு அதிகமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கடந்த 13 ஆம் நாள் இடம் பெற்ற கோப் 25 மாநாட்டில் “போர் காலநிலை



மாற்றத்தை ஏற்படுத்தியது, தற்போது காலநிலை மாற்றம் போரை ஏற்படுத்துகின்றது” என்ற வாச கம் பொறித்த தமது பதாதை பெருமளவான மக்க ளின் கவனத்தை ஈர்த்ததாக போருக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த கிலாரி ஈவான்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த உலகத்தை வழிநடத்தி உயிரினங்களை காப்பாற்றும் ஒரு உண்மையான அரசியல் தலை மை எமக்கு தேவை. கிறேற்றாவின் நோக்கத்திற்கு நாம் எமது ஆதரவுகளை வழங்க வேண்டும் என கிறீன் கட்சியின் கிழக்கு இங்கிலாந்து பகுதி அரசியல் தலைவர் கத்தரின் றொவட் தெரிவி த்துள்ளார்.

ஆனால் பூமி வெப்பமடைவதை தடுப்பத ற்குரிய வழிகள் ஏன் பயன்தரவில்லை என்ற கேள்விகளும் எழுகின்றது.

அதற்கான காரணங்கள், அதன் விளைவுகள் தொடர்பான சரியான விளிப்பூட்டல்கள் மக்களைச் சென்றடையவில்லை. நாடுகளுக்கு இடையிலான பொருளாதாரப் போரில் சில நாடுகள் இதனை கருத்தில் எடுப்பதில்லை. அதிகரித்துச் செல்லும் மக்கள் தொகை மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரம். இவ்வாறு பல காரணங்களை நாம் கூறலாம்.

ஆனால் அதனை கட்டுப்படுத்துவதற்கான பணிகள் என்பது ஒவ்வொரு மனிதனினதும் உள்ளத்திலும் செயற்பாட்டிலும் இருந்து உருவாக வேண்டும்.